Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 21 புதன்கிழமை (04.06.2014) பக்கங்கள் 20 ஓசை – 246

## அது மர்ம விமானம் அல்ல

யாழ். நகரில் விடுதி ஒன்றின் கூரையில் இருந்து நேற்று முன் தினம் மீட்கப்பட்ட சிறியவகை தானியங்கி விமானம் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றினுடையது. அவர்கள் அனுமதிபெற்று தமது விளம்பரத் தேவைகளுக்காக அந்த விமானத்தை பயன் படுத்தியுள்ளனர். இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏக்கநாயக்க. யாழ் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றின் மேற்கூரையில் இருந்து சிறிய ரக மர்ம விமானம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது. அத்துடன் தமது விமானம் ஒன்று காணாமற்போயுள்ளதாகச் சம்பந்தப்பட்ட நிறுவனமும் முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தது. இந்த நிலையில் கருத்து வெளியிட்டுள்ள யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸாரால் மீட்கப்பட்ட சிறியரக விமானம் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றினுடையது. இந்த நிறுவனம் மொனராகலை, தம்புள்ள, குருநாகல் ஆகிய பிரதேசங்களிலும் இந்த சிறிய ரக விமானத்தை பயன்படுத்தி விளம்பர நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கின்றது. இதேபோல யாழ்ப்பாணத்திலும் அவர்கள் விளம்பர நடவடிக்கையை மேற்கொள்ளும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தெற்கிலும் மலையகத்திலும் கனமழை
## 23பேர் பலி; 27ஆயிரம் பேர் இடப்பெயர்வு

அண்மைய சீரற்ற காலநிலை மாற்றத்தினால் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் இதுவரை 6 மாவட்டங்களில் 23 பேர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் களுத்துறை மாவட்டத்திலேயே அதிகளவாக 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கொழும்பு மற்றும் இரத்தினபுரியில் மூவர் பலியாகியுள்ளதோடு, காலி, மாத்தளை மற்றும் குருந்நாகலில் தலா ஒரு மரணங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, மலையகத்தில் தொடர்ந்தும் இடியுடன் கூடிய கனமழை பெய்வதுடன், சீரற்ற காலநிலையே நிலவுகின்றது. இதனால் ஹட்டன் குடாகம மற்றும் கொட்டகலை கொமாஷல் ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

சீரற்ற காலநிலை தாக்கத்தினால் இதுவரையில் 27 ஆயிரத்து 243 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அவர் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்தநிலையில் அனர்த்த நிலையின் போது உயிரிழந்தோரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. 8 பேர் காயமடைந்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேசத்தை நம்பியிருங்கள் என்ற கோஷம் தமிழ் மக்களிடையே தொடர்ந்து எடுபடுமா?



## விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் கேள்வி

தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க ஆக்கபூர்வமாக வினைத்திறனாக நாம் செயற்பட முனையாதபோது, தொடர்ந்து அடக்குமுறைகளுக்கு உட்பட்டு வாழும் மக்கள், அதற்கு எதிராக செயற்பட முன்வராமல் இசைவாக்கம் அடைந்துவிடுவார்கள் என்றே தோன்றுகிறது. இதனைத்தான் இலங்கை அரசும் எதிர்பார்க்கின்றது.

ஆகவே, புதிதாக சிந்தித்து, முற்போக்கான முறையில், பரந்துபட்ட அரசியலாக, தீர்வுகளை தரக்கூடிய வகையிலான சிந்தனைகொண்ட தலைமை (அனைவரையும் உள்வாங்கிய இயக்கம்) இன்று தமிழ் தேசிய அரசியலுக்கு அவசியமாக இருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் சட்டத்தரணியும், மனித உரிமை செயற்பாட்டாளரும், யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை விரிவுரையாளருமான குமாரவடிவேல் குருபரன்.

இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் விடுதலைப் புலிகளை அழித்ததன் பின்னர் தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்குவதற்கான வாய்ப்பு இன்னும் உருவாகவில்லை. மாறாக, சிங்கள - பௌத்த அரசியல் வலிமை பெற்றிருக்கின்றதே அன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாய்ப்பு - சந்தர்ப்பம் - வெளி இன்னும் உருவாக்கப்படவில்லை.

விடுதலைப் போராட்டம், தமிழ் மக்களுக்கான ஒரு அரசை தோற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தாலும், தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ந்து நடத்தப்படும் அநீதிகளுக்கு எதிரான ஒரு தடையாக இருக்கவேண்டும் என்றும் செயற்பட்டது. ஆகவே, ஆயுதப் போராட்டம் செயற்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில் வன்னியில் நில அபகரிப்பு இடம்பெறுவதற்கான ஒரு சூழ்நிலை அங்கு இருக்கவில்லை. தற்போது விடுதலைப் போராட்டம் இல்லாத ஒரு சூழ்நிலையில் சர்வதேசம் அதனை தடுத்து நிறுத்தும் என தமிழ் அரசியல்வாதிகள் கூறுகிறார்கள். ஆனால், இதுவரை சர்வதேச சமூகம் எடுத்துள்ள செயற்பாடுகள் எவையுமே தமிழ் மக்களுக்கு எதிராக

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களை விடுவிக்க ஜனாதிபதி விசேட உத்தரவு



தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 29 பேரையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த 29 மீனவர்களையும் அவர்களின் படகுகள் மற்றும் வலைகளுடன் கடற்படையினர் கைதுசெய்தனர்.

## ஓமந்தையில் ஆணின் சடலம்

வவுனியா மாவட்டத்தில் அரசங்குளம் பகுதியில் புகையிரத பாதையோரமாக ஆண் ஒருவரின் சடலம் அடிபட்ட காயங்களுடன் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.


இதுவரையில் அடையாளம் காணப்படாத இந்த சடலமானது சுமார் 60 வயது மதிக்கத்தக்க வெள்ளை நிற சேட்டும் வெள்ளை நிற வேட்டியும் அணிந்திருந்த நிலையில் இவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச்சடலம் தலைப்பகுதியில் அடிபட்ட காயங்களுடன் உடல் பகுதியில் ஆங்காங்கே சிறு காயங்களுடன் காணப்படுகிறது. புகையிரதத்தில் பயணிக்கும் பொழுது தவறி விழுந்திருக்கலாம் அல்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்திசெய்ய விசேட ஆலோசனை

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டு மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

### முல்லையில் மக்கள் சந்திப்பு



அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டு பல்வேறு பகுதிகளுக்கு சென்றது மட்டுமன்றி பல்வேறுபட்ட மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சண்டிலிப்பாயில் மோட்டார் குண்டு

சண்டிலிப்பாய் கரைப்பிட்டி பிள்ளையார் கோவில் தோட்டக் காணி கிணற்றில் இருந்து வெடிக்காத மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

நேற்று 513ஆவது படைப்பிரிவினரால் மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தோட்டக்காணியில் உள்ள கிணற்றினை உரிமையாளர்கள் துப்புரவு செய்யும் பணியில் ஈடு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் நால்வர் கடலில் மீட்பு

கடலில் மூழ்கவிருந்த மீன்பிடிப் படகில் இருந்து நான்கு இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டு காப்பாற்றியுள்ளனர் என இலங்கை கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. தலைமன்னாரில் இருந்து 11 கடல் மைல் தொலைவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நால்வர் கொண்ட குழுவாக படகு ஒன்றில் வந்த இந்திய மீனவர்கள், மீன்பிடித்துக்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வற்றாப்பளை அம்மன் வருடாந்த உற்சவம்; முல்லை செயலகத்தில் விசேட கலந்துரையாடல்



(வற்றாப்பளை)

வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ள நிலையில் உற்சவத்துக்கான முன்னேற்பாடுகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதலைமையில் சிறப்பு முன்னேற்பாட்டுக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது. இதன் போது, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், மலசலகூடம், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு அவை தொடர்பில் துறைசார்ந்தோரிடம் கேட்டறியப்பட்டது.

இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வருகை தரவுள்ள நிலையில் அவர்களது போக்குவரத்தை இலகுவாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் விசேடமாக ஆலய அறங்காவலர் சபையினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து பரிசிலிக்கப்பட்டு அதற்கேற்ற வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

அதில் திருவிழா காலத்தின் போது கோவிலின் சுற்றுச் சூழலின் சுத்தம் சுகாதாரம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இதன் போது அரச திணைக்களத்தின் பிரதிநிதிகள், படைத்தரப்பு, பொலிஸ் தரப்பு ஆகியவற்றின் பங்களிப்பு தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் போது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், மேலதிக அரசாங்க அதிபர் மோகன்றாஸ், வற்றாப்பளை அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் குகதாசன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கனகரத்தினம், ஈ.பி.டி.பி.யின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்), வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# ஆரம்ப மருத்துவ நிலையம் தொல்புரத்தில் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு திறப்பு விழா நாளை வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், சங்கானை பிரதேச செயலர் ஏ. சோதிநாதன், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# திண்மக் கழிவு அகற்றல்; 55 ஆவது படையணி மும்முரம்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உபகரணங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக 55 ஆவது படைப்பிரிவின் படை அதிகாரி அஜித் காரியகரவண தெரிவித்துள்ளார்.

யாழ். பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக சுற்றாடல் தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், வீடுகள் மற்றும் பாடசாலை, வீதிகளில் உள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை அகற்றுவதற்கு இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அந்தவகையில், எதிர்வரும் 7ஆம் திகதி பொதுமக்களினால் பயன்படுத்தப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைப் பொதுமக்களின் வீடுகளின் முன்பாக வைக்குமாறும் அதனை இராணுவத்தினர் எடுத்துச் செல்வார்கள் என்றும் அவர் கூறினார்.

இச்செயற்பாட்டினை பொலிஸ மற்றும் இராணுவத்தினர் இணைந்து செயற்படுத்தவுள்ளதனால், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறும், உலக சுற்றாடல் தினத்தன்று பொலித்தீன் வகைகளை வீதிகளில் வீசாமல், இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதற்கான விழிப்புணர்வுகளை மக்களுக்கு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

பொலித்தீன் பாவனையினை முற்றாகத் தடைசெய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமென்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (25, பா)


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



1 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர் : யுகேந்திரன் சயந்தவி

முகவரி:மடத்துப்பிள்ளையார் கோவிலடி, தொல்புரம்.


# சுற்றுலாப் பயணியிடம் திருட்டு; பாடசாலை மாணவன் கைது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்துறை சாட்டிக் கடற்கரைக்கு வந்த சுற்றுலாப் பயணியிடம் திருடிய 13 வயதுடைய பாடசாலை மாணவனை ஊர்காவற்துறை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

வேலணை அம்பிகைநகர் பகுதியைச் சேர்ந்த சிறுவனே கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாட்டிக் கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த சுற்றுலா பயணியிடம் இருந்த 18 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசியினைத் திருடிச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரமே குறித்த சிறுவன் நேற்று ஊர்காவற்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், சிறுவனிடம் இருந்து 3 தொலைபேசிகளும், 18 ஆயிரம் ரூபா பணம ஆகியவை மீட்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி சிறுவனை இன்று யாழ்.சிறுவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் ஊர்காவற்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# வருடாந்த மஹோற்சவம்

(அல்வாய்)

அல்வாய் அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

சிவசிறி.சண்முகநாதக்குருக்கள் பிரதம குருக்களாக இருந்து மஹோற்சவத்தை நடத்தி வைக்கவுள்ளார். (90)

# சுற்றாடல் பேணும் போட்டி

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தூய்மையாக சுற்றாடலைப் பேணும் போட்டி நடத்தப்பட்டது.

இதில் முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளுக்கு பரிசளிப்பு நிகழ்வு யூன் நாளை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ள சர்வதேச சுற்றாடல் பாதுகாப்பு தினத்தில் வழங்கப்பட உள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்க உள்ளதாக இலங்கை மத்திய சுற்றாடல் பாதுகாப்பு சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான உதவிப் பணிப்பாளர் து.சுபோகரன் தெரிவித்தார்.

இவ்வாறு பரிசினைப் பெறும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள். முதலாமிடம்: கண்டாவளை, ம.வி., இரண்டாமிடம் இரு பாடசாலைகள் : முருகானந்தா ம.வி., சென் திரேசா மகளிர் கல்லூரி, முல்லைத்தீவு மாவட்டம் :முதலாமிடம்: மாங்குளம் ம.வி., இரண்டாமிடம், பாலிநகர் ம.வி., மூன்றாமிடம் : வித்தியானந்தா கல்லூரி முள்ளியவளை,

இப் போட்டி பாடசாலை சுற்றாடலை பொலித்தீன் பிளாஸ்டிக் பாவனையற்ற வகையில் வைத்திருந்து, சக்தி, சேமிப்பைப் பேணுதல், பாடசாலை சுற்றாடலை பசுமையாக வைத்திருத்தல், ஆரோக்கியமான நிலையில் பாடசாலையை வைத்திருத்தல் போன்றவற்றை அவதானித்து இப் பரிசில் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (90)

# விதை பொருட்கள் விற்பனை; யாழ்.மாவட்டத்தில் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மத்திய விவசாய அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள தேசிய விதைகள் வாரத்தை முன்னிட்டு யாழ்.செயலக விவசாயப் பிரிவில் விவசாயத்திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் மற்றும் கன்றுகள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமையில் இருந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இந்தத் தேசிய விதை வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனையொட்டி யாழ்.செயலக விவசாயப் பிரிவில் நேற்று முதல் எதிர்வரும் வெள்ளி வரை வதைகள் மற்றும் பழமரக்கன்றுகள் விற்பனை செய்யப்படும் நிகழ்வை யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆரம்பித்துள்ளதுடன் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் தமக்குத் தேவை யானவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர் என்று யாழ்.மாவட்ட விவாசயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்திலும், திருநெல்வேலிச் சந்தைப் பகுதியிலும் இவ்வாறு விதை மற்றும் பழமரக் கன்றுகள் விற்பனை நடைபெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# இன்று பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, வித்தியாலயத்தின் அதிபர் வே.கந்தசாமி தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

# வாக்காளர் பதிவு விழிப்புணர்வு பேரணி

வவுனியாவில் வாக்குரிமையின் அவசியத்தை வலியுறுத்தி நேற்று ஊர்வலம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்தினால் ஞானம் அறக்கட்டளையின் அனுசரணையுடன் இடம்பெற்ற இவ் ஊர்வலத்தில் வாக்குப்பதிவு செய்வதில் மக்கள் ஆர்வம் செலுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தி பதாதைகளைத் தாங்கியவாறு வாக்காளர் பதிவில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வாக்காளர் பதிவுவாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஊர்வலத்தில் வழிப்புணர்வு வீதி நாடகங்களும் இடம்பெற்றிருந்தது.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# மாணவர் வாழ்க்கைக்கு ஒன்றுகூடல் அவசியம்

## யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

பாடசாலைகளில் நடைபெறுகின்ற உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் அவர்களின் வாழ்க்கைக்குத் தயார்படுத்துகின்ற நிகழ்வுகளாக அமைகின்றன இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுப்பையா சண்முககுமார்

கோண்டாவில் இந்து.மகாவித்தியாலய உயர்தரமாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் மதியபோசன விருந்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செல்வி.கு.சுஜித்தா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் 40 வருடங்களுக்கு முன் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் இரவு வேளையில் நடைபெறும். ஆரம்பத்தில் கூச்சப்பட்டு வெட்கப்பட்டு வெறுப்பாக ஒன்றுகூடலில் கலந்து கொண்ட மாணவர்கள் இறுதியில் கூச்சசுபாவம் நெருக்கமான நட்புப் பிணைப்புடன் ஒன்றாகி விடுவார்கள். அவர்களைப் பிரிப்பதற்கே போராடவேண்டியிருக்கும். பிணைப்புக்கள் வலிமையாகி விடும். இது அன்று மிகவும் சுவாரஸ்யமான நிகழ்வாகும். இன்றைய காலச்சூழ்நிலைக்கேற்ப பகல் நிகழ்வாக மாறி ஆடம்பரம் குறைந்து அமைதியாக நடைபெறுகிறது.

இத்தகைய நிகழ்வுகளில் பங்கு பற்றுவதால் பரீட்சை நோக்கில் மாணவர்களுக்கு இயல்பாக உள்ள பயம் நீங்கி உற்சாகத்துடன் பரீட்சைகளை எதிர்நோக்கி வெற்றிபெற முடிகிறது.

பரீட்சைக்காக கிரமமாகப் படிக்கின்ற மாணவர்களின் களைப்பு நீங்கி மனதில் உற்சாகத்துடனும், புத்துணர்வுடனும் பரீட்சைக்குத் தொடர்ந்து தயார்படுத்த இவ்வாறான மகிழ்ச்சியான ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடாத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக இப்பாடசாலை, பல்கலைக்கழகங்களுக்கும், கல்வியியற்கல்லூரிகளுக்கும் தொடர் மாணவர்களை அனுப்பி தனது பெயரைத்தக்க வைத்துக் கொண்டு வருகிறது. இதே போல் எதிர்காலத்திலும் அதிக எண்ணிக்கையானோர் இப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் கல்வியியற் கல்லூரிகளுக்கு செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

உயர்தர மாணவர் மன்றத்தின் செயலாளர் செல்வி.பா.தமிழ்மதி நன்றி நவின்றார். (10)



யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக இருக்கும் வாய்க்கால் துர்நாற்றம் வீசுவதால், யாழ்.மாநகர சபையின் பணிப்புரைக்கமைய மாநகர சபை சுகாதார ஊழியர்கள் துப்புரவுப் பணியை மேற்கொண்டு வருவதைக் காணலாம். (25)

# பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் வே.கந்தசாமி தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் சமாதிலிங்கம் சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாக) வே.பாலசுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம் கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி திருமதி அனுசியா சத்தியசீலன் வழங்கவுள்ளார்.

இறுதி நிகழ்வுகளாக மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

# பரதநாட்டிய இலவச வகுப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கலை மன்றத்தின் ஏற்பாட்டில் இலவச பரதநாட்டிய வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப.3மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ள மன்றத்தின் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தென்மராட்சி பிரபல ஆசிரியர்களால் நடாத்தப்படும் இந்த வகுப்புக்களுக்கு பதிவுசெய்த அனைத்து மாண்வர்களையும் அன்றையதினம் வகுப்புக்கு சமூகமளிக்குமாறும், புதிதாக சேரவிரும்பும் ஏனைய மாணவர்கள் உடனடியாக தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பரதநாட்டிய வகுப்பினை ஆரம்பிப்பதற்கான நிதியுதவியை கனடா நாட்டில் வசிக்கும் அன்பர் ஒருவர் வழங்கியிருப்பதாக மன்றத்தின் செயலாளர் என்.மோகனராயலிங்கம் தெரிவித்துள்ளார். (11)

# “அன்ன நடை நடக்கப் போய் தன் நடையும் விட்ட” கால்வாசித் தேசியவாதிகள்...




கன நாளாக இருக்கிற ஒரு சந்தேகத்தை, இண்டைக்கு கணக்காகப் போட்டுப் பாக்கலாம் எண்டு ஒரு யோசினை வந்திது.

தமிழாக்களின்ரை அரசியலை ரண்டாகப் பிரிக்கலாம். துரோகி-தியாகி எண்டு, கறுப்பு-வெள்ளை எண்டு, அரசாங்க ஆதரவு - அரசாங்க எதிர்ப்பு எண்டு, தமிழ்த்தேசியம் - எதிர்த்தேசியம் எண்டு...

**இந்த மாதிரி ரண்டு பிரிவுகளாகத்தான் சனங்களும் பிரிஞ்சு போயிருக்குதுகள். இப்பிடி ரண்டு பிரிவிலதான் அவை எப்பவும் சிந்திக்கினம். நீ அந்தப்பக்கமா? இந்தப்பக்கமா?** எண்ட மாதிரி...

இது எதிரியா – நண்பனா? எண்ட நெத்திமுட்டுக் கேள்வியைக் கொண்டு வந்து முன்னால நிற்பாட்டுற விளையாட்டு. இந்த விளையாட்டு ஒரு நாளும் அரசியலுக்குத் தோதுப்படாது.

**‘அரசியல்ல நண்பனும் இல்லை எதிரியும் இல்லை’** எண்டு சொல்லுவினம். இதுதான் உண்மையும் கூட.

ஆனால், தமிழாக்களுடைய அகராதியில வேறமாதிரித்தான் இருக்கு.

அதில வெட்டொண்டு, துண்டு ரெண்டு எண்ட கணக்கில அடிச்சால் மொட்டை, கட்டினால் குடும்பி எண்டுதான் எழுதியிருக்கு.

**அதால எதையும் கறுப்பு-வெள்ளையாக, நேர்-எதிராகத்தான் எல்லாம் பாக்கப்படுது. இந்த மாதிரியான பார்வை இருக்கிற வரைக்கும் அரசியல்ல தமிழாக்கள் கொடியேத்தேலாது.**

அதுக்குப் பதிலாக மற்ற ஆட்கள்தான் தமிழாக்களின்ரை கொடியை இறக்குவாங்கள். அப்பிடித்தான் நடந்து கொண்டுமிருக்கு.

இப்ப தமிழாக்களின்ரை அரணாக்கொடியை (அரைஞாண்கயிற்றை)யும் இறக்கிற கட்டம் வந்திட்டுது.

**அரசியலில எப்பவும் ஆட்களைக் கையாளுறது, தரப்புகளைக் கையாளுறது, நிலைமைகளைக் கையாளுறது, சந்தர்ப்பங்களைக் கையாளுறது, விடயங்களைக் கையாளுறது எண்டதே முக்கியம்.**

இதைத்தான் சாணக்கியரும் சொல்லிறார். மாக்கியவல்லியும் சொல்லிறார். நானும் சொல்லிறன். அரசியல் விளங்கின எவனும் எவளும் சொல்லுவினம்.

அப்பிடிச் செய்தால்தான் கொடியேத்தலாம்.

இப்ப பாருங்கோ, வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், இந்தச் சேத்துக்குள்ள (அரசியலுக்குள்ள) குதிக்கிறதுக்கு முதல்ல, என்ன மாதிரி மதிப்பாக இருந்த மனிசன்.

பிரதம நீதியரசர் எண்டு ஒரு மரியாதை. ஆன்மீகவாதி எண்டு ஒரு மதிப்பு. தமிழார்வம் உள்ள மனிசன் எண்டு நாலு பேரிட்ட ஒரு வரவேற்பு....

பாழாய்ப்போன காலம். விக்கியருக்கு ஏதோ ஏழரைச்சனி பிடிச்சமாதிரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை அரசியலுக்குள்ள தொடுப்பு வைச்ச நாளையில இருந்து, அவனவன் தன்ரை தன்ரை விருப்பத்துக்கு ஆளைப் போட்டு அல்வா கணக்கில சாப்பிடுகிறான்.

ஒரு கமெராவையும் நோட் புக்கையும் கையில வைச்சுக்கொண்டு தானும் ஒரு மீடியாக்காரன் – மன்னிக்கவும் ஊடகப்போராளி இல்லாட்டி இணையத் தளபதி (இளைய தளபதி எண்டு ஆரும் மாறி வாசிச்சிடப்படாது) எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறவனே விக்கியரை வெருட்டு வெருட்டெண்டு வெருட்டிக்கொண்டிருக்கிறான்.

அரசியலுக்கு வந்த பிறகும் கூட விக்கியர் ஆக மோசமான ஆள் இல்லை எண்ட மாதிரி ஒரு நல்ல அபிப்பிராயம் ஆளைப்பற்றி இருந்திது.

ஆனால், பிறகு...?

பிறகென்ன, அன்ன நடை நடக்கப்போய் தன் நடையும் இழந்த காகத்தைப் போல விக்கியர் தேசியப் பானத்தைக் குடிக்கக் குடிக்க அதின்ரை போதை ஏறித் தலைகால் ஒண்டும் புரியேல்ல.

ஆனாலும் விக்கியற்றை இயற்கையான குணத்தை அவர் உடன விடேலாதுதானே.

அதால அங்கயும் இங்கயுமாக பெண்டுலமாய் ஆடிக்கொண்டிருக்கிறார்.

ஒருக்கால் பார்த்தால் தேசியவாதியாக இருக்கிறார்.

இன்னொருக்கால் பார்த்தால் அரசாங்கத்துக்கு எதிராக ஆட்லறியை அடிக்கிற தளபதியைப்போல இருக்கும்.

ஆனால், விக்கியரோ சுமந்திரனோ என்னதான் தேசியத் தைலத்தைப் பூசினாலும் அவர்களால தேசியச் செடியில ஒரு மசிரும் புடுங்கேலாது.

எண்ட படியால், இவை ரண்டு பேரும் அரைத் துரோகிகள். கால்வாசித் தேசியவாதிகள், அரைக்கால்வாசித் தியாகிகள்.

இவையை ஒருக்காலும் முழுத்தேசியவாதிகளாக ஆரும் ஏற்றுக்கொள்ள மாட்டினம்.

ஏனெண்டால் இவைக்கு கொஞ்சம் வெளியுலக அனுபவமும் அறிவும் இருக்கெல்லோ....

அதால, இவையள் தலையெடுக்கிறதை ஒரு நாளும் விரும்ப மாட்டாங்கள்.

இப்பிடியே சேத்துக்குள்ளை கிடந்து கறுப்பு வெள்ளை எண்டு கலர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இந்த மாதிரி தியாகி–துரோகிப் பட்டியல் போடுற ஆட்களுக்குப் பயந்து–அஞ்சி அஞ்சிச் சாகாமல், வருத்தக்காரர் ஆகாமல் விக்கியராக்கள் முன் வந்தால் இந்த நாடு முன்னேறும். பிரச்சினைகளும் தீர்ந்து விடும்.

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு பலவீனமே மரணம். - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இனச்சாய்வு எழுத்தாளர்கள்!

நமது அரசியல் ஆய்வாளர்கள், அறிஞர்கள், அறிவுஜீவிகள் எனப்படுவோர் ஒன்றில் அரசாங்கத்தின் பிழைகளை புட்டுப்புட்டு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தவறுகளைச் சுட்டிக்காட்டி எழுதிவருகிறார்கள்.

மேற்படியார்களின் புட்டுவைத்தலும் சுட்டிக்காட்டுதலும் மாற்றமெதுவுமில்லாமல் ஒரே விஷயங்களாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. அவர்களூமோ தங்கள் நடவடிக்கைகளை ஒரேமாதிரியாகத் தொடர்ந்து வருகிறார்கள்.

தமிழ்த் தரப்பினர் எவ்வாறு புலிகளின் மாவீரக் காலத்தை அவ்வப்போது நினைவூட்டியபடி அரசுக்கெதிராக வாயால் விடும் சவால்களும் உணர்ச்சிகரமான தமிழர்களை உருவாக்கும் ஊடகச் செய்திகளூமாகத் தங்கள் வாக்குகளூக்கு வழி செய்து வருகிறார்களோ அவ்வாறே அரசதரப்பினரும் புலிகளின் காலத்தை கிலியோடு நினைவூட்டிச் சிங்கள தேசியத்தை உசுப்பேற்றியபடி தங்கள் தேர்தல் வெற்றிகளூக்கு வழிசெய்து வருகிறார்கள்.

சமகாலத்தில் அறிஞர்கள், அறிவுஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள் எனப்படுவோர் மாய்ந்துமாய்ந்து எழுதும் கட்டுரைகள் கருத்துச் செறிவூட்டல்கள் எல்லாம் இப்படியாக இரு தரப்புகளினதும் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கு உதவிவருவதைப் பார்க்க முடிகிறதே தவிர, நமது மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தையோ அரசியல்ரீதியான நம்பிக்கையையோ சிறு அசைவாகவேனும் காட்டியதாய்க் காணோம்.

அந்தப் பக்கமுள்ள அரசியல்வாதிகளூம் இந்தப் பக்க அரசியல்வாதிகளூம் ஒரேமாதிரியாகத் தொடர்வதற்கு இந்த அரசியல் ஆய்வு எழுத்தாளர்களூம் உதவிவருகிறார்கள் என்பதுதான் உண்மை. சுயலாப அரசியலை உத்தேசித்தே இருதரப்பும் விடாக்கண்டன் கொடாக்கண்டன் நாடகம் ஆடிவருகிறார்கள் என்று தெரிந்தும் அவர்கள் அதையே உற்சாகமாகத் தொடரும் விதமாகத்தான் இவர்களூம் எழுதிவருகிறார்கள்.

அறிவுஜீவிகள் எனப்படுவோர் தங்கள் இன, மத, மொழி அபிமானங்களூக்கு அப்பால் நின்று சிந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இங்கே யாரும் அப்படியாகச் சிந்தித்து எழுதுகிறவர்களைக் காண முடியவில்லை.

உணர்ச்சிகரமாக போதையேற்றி பதவிகளை வெல்லும் அரசியல்வாதிகளின் இனவாதப் பேச்சுக்களால், மக்கள் உளரீதியாகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் நாட்டில், தாங்கள் சார்ந்த தரப்பை மட்டும் மேலுக்கு உயர்த்தி, பிளவை மேலும் அதிகப்படுத்தி விடும்படியாகவே இந்த ஆய்வாளர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தவிதமாக இங்கே இணக்கம் உருவாவதோ பிரச்சினை தீர்வதோ நடைபெறப் போவதில்லை. எதிர்த் தரப்புப் பிழைகளே மோசமானவை மன்னிக்க முடியாதவை என்று சொல்லிக்கொண்டு, எப்படி எதிர்த் தரப்பு இணக்கத்திற்கு இறங்கி வரவேண்டும்–வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?

போரை உற்சாகப்படுத்தி எரியவிட்டுக் கொண்டிருந்த காலத்திலும் நம் எழுத்தாளர்கள் இப்படித்தான் எழுதிக் கொண்டிருந்தார்கள். போராடும் ஒரு குழு செய்யும் பயங்கரவாதச் செயல்களைவிட அங்கீகரிக்கப்பட்ட அரசு செய்யும் பயங்கரவாதச் செயல்களே மோசமானவை முதலில் கண்டிக்கப்பட வேண்டியவை என்று உலக ஆதாரங்களையெல்லாம் காட்டி எழுதிக்கொண்டிருந்தவர்கள் இருக்கிறார்கள்.

பயங்கரவாதத்தில் உயர்ந்தது தாழ்ந்தது கண்டுபிடித்துக் கொண்டிருப்பது என்ன அறிவுஜீவித்தனம்? அப்படி ஒன்று மோசமானது மற்றது அதற்குக் குறைவானதுதான் என்று சொல்வதே... குறைவான பயங்கரவாதத்தைப் பிணையெடுத்து ஊக்குவிப்பதல்லாமல் வேறென்ன? தர்மப் பயங்கரவாதம் அதர்மப் பயங்கரவாதம் என்றெல்லாம் உள்ளதா? பயங்கரவாதம் என்பதே அதர்மம் அல்லாமல் என்ன!

இப்படியாக, இனம்சார்ந்து கொந்தளித்து எழுதிக்கொண்டிருக்கும் வரை இணக்கம் என்பது வராது. - ஆசிரியர்.

# யுத்தம் முடிந்து குறுகிய காலத்தில் இலங்கையில் பாரியளவில் அபிவிருத்தி

## –உகண்டாவின் உள்துறை அமைச்சர் பாராட்டு–

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து குறுகிய காலத்தில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக உகண்டாவின் உள்துறை அமைச்சர் ஒகெல்லோ ஓரியம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உகண்டா உள்துறை அமைச்சர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடினார் இந்தச் சந்திப்பின போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதியிடம் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

உகண்டாவும் பயங்கரவாத பிரச்சினைகளை எதிர்நோக்கி இருந்தது அதனால் பாதிப்புக்களை நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. உகண்டாவிற்கு விஜயம் செய் தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், முதல் பெண் மணி ஷிராந்தி ராஜபக்ஷ விற்கும் நன்றி பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆபிரிக்க நாடுகளூக்கான தமது விஜயம் வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காணாமற் போனோர் விசாரணைக்கு மட்டக்களப்பில் 200 பேருக்கு அழைப்பு

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட விசாரணைகள் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ளன. விசாரணைகளூக்காக சுமார் 200 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விசாரணை அமர்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் திங்கள் வரை முன்னெடுக்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்துள்ளார்.

விசாரணை அமர்வுகளில் புதிய சாட்சியங்களூக்கான பதிவுகளூம் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறிப்பாக காத்தான்குடியில் காணப்படுவதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழி தொடர்பில் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சாட்சி பதிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்துள்ளார்.

# சுற்றாடலை சுத்தமாகப் பேணிய பாடசாலைகளுக்கு பரிசில்கள்

பாடசாலை சுற்றாடலைச் தூய்மையாகப் பேணுதல் தொடர்பான போட்டியில் வெற்றியீட்டிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளூக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய சுற்றாடல் பாதுகாப்பு சபையின் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களூக்கான உதவிப்பணிப்பாளர் து.சுபோகரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ள சர்வதேச சுற்றாடல் பாதுகாப்பு தின நிகழ்வில் வைத்தே பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி போட்டியில் பாடசாலை சுற்றாடலை பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையற்ற வகையில் வைத்திருந்தமை, சக்தி சேமிப்பை பேணுதல், பாடசாலைச சுற்றாடலை பசுமையாக வைத்திருத்தல், ஆரோக்கியமான நிலையில் பாடசாலையை வைத்திருத்தல், போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டு ஒரு மாவட்டத்தில் மூன்று பாடசாலைகள் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தினை கண்டாவளை மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தினை முருகானந்தா மகா வித்தியாலயம மற்றும் சென்.திரேசா மகளிர் கல்லூரி ஆகியன பெற்றுக்கொண்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தினை மாங்குளம் மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தினை பாலிநகர் மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தினை முள்ளிவளை வித்தியானந்தா கல்லூரியும் பெற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

## மணல் அகழ்வில் ஈடுபட்டோரை பொலிஸில் சிக்கவைத்த பொதுமகன்

(யாழ்ப்பாணம்)

யாழ்., சாவகச்சேரி, கச்சாய்ப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மணல் அகழ்வதற்கு பயன்படுத்திய உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த மூவரும் மணல் அகழ்வில் ஈடுபடுவதாகப் பொதுமகன் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார், கச்சாய் கேணியடிப் பகுதியினைச் சேர்ந்த மேற்படி மூன்று நபர்களையும் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மூடப்பட்டது றுகுணு பல்கலைக்கழகம்

றுகுணு பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரையிலும் மூடப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு மாணவர்களூக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் மகுடம்-2014 கண்காட்சியை இந்தப் பல்கலைக்கழகத்தில் நடத்தக் கூடாது என்று மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக்கண்காட்சியை இங்குதான் நடத்த வேண்டும் என்று பிரதியமைச்சர் சனத் ஜயசூரியவின் ஆதரவாளர்களூம் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மாணவர்கள் பல்கலைக்கழக கட்டடங்களூக்குள் சிக்கிக்கொண்டனர். மாணவர்களை பொலிஸார் பாதுகாப்பாக கட்டடங்களிலிருந்து வெளியேற்றினர்.

இதனையடுத்தே பல்கலைக்கழகத்தை மறு அறிவித்தல் வரை மூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழிலிருந்து புறப்பட்ட யாத்திரிகர்கள் சித்தாண்டியை சென்றடைந்தனர்


(யாழ்ப்பாணம்)

கதிர்காம கொடியேற்றத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியில் இருந்து நடைபாதையாக கடந்த 10ஆம் திகதி புறப்பட்ட பக்த அடியார்கள் ஐம்பது பேர், வாழைசசேனையூடாக சித்தாண்டி முருகன் ஆலயத்தை திங்கட்கிழமை சென்றடைந்துள் ளனர்.

சித்தாண்டியை வந்தடைவதற்கு தங்களூக்கு 24 நாட்கள் சென்றுள்ளதாகவும், எதிர்வரும் 18ஆம் திகதி உகந்தை முருகன் கோவிலை அடைவதே நோக்கம் என்று அக்குழுவிற்கு பொறுப்பாக வழி நடத்திச் செல்லும் மகேந்திரன் தெரிவித்தார்.

நடைபாதையாக கதிர்காம கொடியேற்றத்திற்குச் செல்லும் பக்த அடியார்கள் "கோவில்களில் தங்களது ஆகாரங்களை முடித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினை



**மனிதர்களுக்கு பயன்படுகின்ற நீர் வளங்களை அழிக்கும், மாசுபடுத்தும் வகையில் மனிதனே செயற்படுவதையும் சிந்திக்க வேண்டியுள்ளது. சூழல் மாசடைதல் என்பது இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்வு அல்ல அது மனிதனால் நிகழ்த்தப்படும் ஒரு நிகழ்வு.**

உலகின் சகல மனிதர்களுக்கும் அவர்களது உயிர்வாழ்க்கைக்கு நீர் மிகவும் அத்தியாவசியமானது. யாழ். குடாநாட்டிலும் இன்றுள்ள பிரச்சினைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு நீர் விநியோகமும் சிக்கலானதாக அமைந்துள்ளது. அதிகரித்துச் செல்லும் மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரித்துச் செல்லும் நீரின் கேள்விக்கு போதுமான நீர்வள அதிகரிப்பு நிகழ்வதாக இல்லை.

உற்பத்திச் செயற்பாடுகளில், புதிய பரிமாணமும், வேகமும் அடைந்துள்ள இக்காலகட்டத்தில் நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களினால் உற்பத்தி செய்யப் படமுடியாத, ஒரு திரவமாக நீர் விளங்குகின்றது. எனவேதான் இதன் பெறுமதி மதிப்பிடமுடியாதது. அதிகரித்துச் செல்லும் சனத்தொகை, சூழல் பிரச்சினைகளால் நீரின் பெறுமதி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகிறது.

ஒருகாலத்தில் உலக சூழலியலாளர்களின் கவனத்தை மாத்திரம் ஈர்ந்திருந்த உலக நீர்ப்பிரச்சினை இன்று அனைத்து மட்டங்களினதும் கவனத்தை ஈர்த்திருப்பது பிரச்சினையின் உக்கிரத்தையே எடுத்துக் காட்டுகிறது.

எங்கள் பூமியில் சமாதானம் மலர்ந்து சண்டை ஓய்ந்து விட்டால் நாளை நமக்கு நிம்மதிதானே! இந்த நிம்மதி யதார்த்தமாய் ஒவ்வொரு இலங்கை வாசிக்கும் வரவேண்டிய வருகின்ற ஒன்று தான். ஆனால் இந்தப் பெரும் பிரச்சினைக்குள் மூழ்கிப்போய், போரின் பின்னால் அந்தப்போர் நடந்த பூமியில் விஸ்வரூபம் எடுக்கப்போகும் இயற்கைக்கும் எமக்குமான கொடிய போர் பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பல நாடுகள் சந்தித்த இயற்கை மாற்றத்தினூடான எதிர்ப்புக்கள் பற்றி எமக்கு நன்றாகவே தெரியும். அவ்வாறானதொரு குடிநீர் குறித்த மிகப்பெரும் பிரச்சினைக்கு இப்போ யாழ். குடாநாட்டு மக்கள் ஆட்பட்டு விட்டார்கள்.

போர்ச்சூழலுக்குள் சிக்குண்டு போயிருந்த யாழ். குடாநாட்டு மக்களுக்கு குடிநீர் மாசடைவது பற்றியும், நிலத்தடி நீர் மாசுறுவது பற்றியும் சிந்திப்பதற்கு நேரம் இருக்கவில்லை. இவ்வாறு நீர் மாசடைவதையும், குடிநீர்வளம் இல்லாமற்போவதையும் தடுப்பது குறித்தும் உருப்படியான அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. இதன் காரணமாகவே யாழ். குடாநாட்டில் குடிநீர் தொடர்பான மிகப்பெரும் பிரச்சினை உருவாகியுள்ளது.

கடந்த 30 வருடகால போரினால் யாழ். குடாநாட்டில் நீர் வளச்சபை, நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை போன்றவற்றின் பணிகள் ஸ்தம்பித்த நிலையிலேயே இருந்தன. இதன் காரணமாக குடாநாட்டைச் சூழ இருக்கும் உவர்நீர் சரியான காப்புறுதித் திட்டங்கள் இல்லாமையினால் நிலத்தடி நீருடன் பெருமளவில் கலந்துகொண்டுள்ளது. இன்னமும் கலந்துகொண்டே இருக்கிறது. இவ்வாறு உவர் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதற்கு காரணம் நன்னீர்க் கால்வாய்கள் கடல் நீருடன் கலந்து கடல்நீர் நிலப்பரப்பிற்குள் ஊடுருவுவதாகும்.

அதேவேளை மழை நீரைத் தேக்கி வைத்து நிலத்தடி நீருடன் கலப்பதற்கான குளங்கள் எதுவும்

**போரின் பின்னால் அந்தப்போர் நடந்த பூமியில் விஸ்வரூபம் எடுக்கப்போகும் இயற்கைக்கும் எமக்குமான கொடிய போர் பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது.**

புனரமைக்கப்படாமையும், சுற்றியிருக்கும் கடல் பகுதிக்கும் தரைப்பகுதிக்குமான கடல் நீரைத் தடுக்கும் அணைகள் எதுவும் இல்லாமற்போனமையுமாகும்.

யாழ். குடாநாட்டின் மூன்று ஆறுகளான வழுக்கை ஆறு, வடமராட்சி ஆறு, உப்பாறு என்பவை கடலுடன் கலப்பதை தடுப்பதற்கான தடுப்புச் சுவர் (Barrage) களை அமைத்து அந்த ஆற்று நீரைப் பேணாவிடின் குடாநாட்டிலுள்ள ஏறத்தாழ ஒரு இலட்சம் கிணறுகளும் காலப்போக்கில் உவர்த் தன்மையுடைய நீரைக்கொண்டனவாக மாறிவிடும்.

போர்ச்சூழ்நிலை யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முறையில் எந்தவித சட்டதிட்டத்தையும் பின்பற்ற வைத்ததில்லை. அந்த வகையில் கால்வாய்கள், வாய்க்கால்கள் எல்லாம் கழிவு எண்ணெய்கள் ஊற்றப்பட்டன. இதன் காரணமாக இன்று பல கிணறுகளில் எண்ணெய்ப் படைகொண்ட தண்ணீரை அள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது. வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவே நிலக்கீழ் நீரோடு சேர்ந்து கிணறுகளினூடு வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த மாநகரசபை, நகர சபைகள் சட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும்.

மேலும் கடந்த போர்ச்சூழலில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்களின் மிஞ்சிய நச்சுப்படிவங்கள் பெருமளவு நீருடன் கலந்து அது நிலத்தடி நீரில் பெருமளவு சேர்ந்துள்ளமை அடுத்த பெரும் பிரச்சினையாகியுள்ளது. கடந்த 30 வருடகாலத்தில் குடாநாட்டிற்குள் பல்வேறு வகையான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பல தொன் எடையுள்ள ஏராளமான குண்டுகள் பொழியப்பட்டிருக்கின்றன. உயிரினங்களுக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நச்சு இரசாயனச் சேர்க்கைகள் இவற்றுள் அடங்கியிருக்கின்றன.

இத்தகைய குண்டுகள் பயன்படுத்தப் படும்போது உடனடியாக ஏற்படும் உயிரிழப்புக்களை விட நீண்டகால ரீதியில் உயிரினங்களுக்கு அவை ஏற்படுத்தும் தாக்கங்களே அபாயம் மிகுந்தவை. இங்கு பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்களின் மிஞ்சிய நச்சுப்படிவங்கள் பெருமளவு நீருடன் கலந்து அது நிலத்தடி நீரில் பெருமளவு சேர்ந்துள்ளமை அடுத்த பெரும் பிரச்சினையாகியுள்ளது.

மாசடைந்த நீரைப் பருகுவதால் நாம் சிறிது சிறிதாக நோயாளிகளாகி, அதுவும் புற்றுநோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கின்றோம். குடாநாட்டு மக்களிடம் புற்றுநோய்த்தாக்கம் அதிகளவில் அண்மைக்காலமாக உணரப்பட்டு வருகின்றது. இதற்கெல்லாம் காரணம் போர்க்காலங்களின் பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்களின் எச்சங்களால் மாசுபடுத்தப்பட்ட குடிநீரே.

அத்துடன் இங்குள்ள மாநகரசபை, நகரசபைகள், பிரதேசசபைகள் கால்வாய்களிலும், குளங்களிலும் குப்பைகளைக்கொட்டி அவற்றை நிரப்பும் கைங்கரியத்தை செய்து வருகின்றன. வைத்தியசாலை கழிவுகளிலிருந்து நகர வாசிகளின் கழிவுகள் வரை கொட்டப்படுகின்றன. கழிவுகள் இவ்வாறு கொட்டப்படுவதால் குடிநீருக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகும்.

மனிதர்களுக்கு பயன்படுகின்ற நீர் வளங்களை அழிக்கும், மாசுபடுத்தும் வகையில் மனிதனே செயற்படுவதையும் சிந்திக்க வேண்டியுள்ளது. வீட்டுக்கழிவுகளையும், வேலைத்தலங்களிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகளையும் குளம், மற்றும் நீர்நிலைகளை அண்டிய பகுதிகளில் கொட்டுதலும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டன. சூழல் மாசடைதல் என்பது இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்வு அல்ல அது மனிதனால் நிகழ்த்தப்படும் ஒரு நிகழ்வு.

இவ்வாறு சரியான முறையில் திட்டம் எதுவுமின்றி கழிவுகள் கொட்டப்பட்டு அவை நீருடன் கலந்து நிலத்தடி நீருடன் சேருவதால் ஒட்சிசன் ($O_2$) செறிவு குறைந்து அமோனியாவின் ($NH_4$) செறிவு அதிகரிக்கிறது. தொழிற்சாலைக் கழிவுகளிலிருந்து வந்து சேரும் இரசம் (Hg) கட்மியம் (Cd) குளோமியம் (Cr) ஈயம் (Pb) சயனைட் (Cw) நைத்திரேற் ($NO_3$) போன்ற இரசாயனப் பொருட்களும் நீரைப் பாவனைக்குகந்ததல்லதாக்கி விடுகின்றன.

யாழ்.குடாநாட்டில் அடிப்படை சுகாதார வசதி இன்றி பலர் திண்டாடுகிறார்கள். மலசல கூட கழிவுக்கான குழிகள் பாதுகாப்பான முறையில் அமைக்கப்படாமையினால் நன்னீர் கிணறுகளுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஒரு மலசல கூட குழிக்கும் கிணற்றுக்குமிடையே இடைத்தூரம் 12 மீற்றருக்கும் குறையாமல் இருக்கவேண்டும். ஆனால் அது யாழ்.குடாநாட்டின் பல இடங்களில் சாத்தியம் இல்லாமல் உள்ளது.

இப்படி மாசடைந்த நீரை பருகுவதால் மக்கள், வாந்திபேதிநோயை சந்திக்க வேண்டியுள்ளது. இது இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஜெர்மனி சந்தித்த கொலரா நோயைப்போன்று பயங்கரமானதாக இருக்கும்.

உலக நீர் பயன்பாட்டில் 80 வீதமான நீரை விழுங்கிக்கொண்டிருக்கும் வேளாண்மை. நன்னீர் ஆதாரங்களின் 20 வீத நீர் மட்டுமே பயிர்களைச் சென்றடைகின்றன. மீதி 60 விழுக்காடு நீர்க்குழாய்களின் கசிவு, ஆவியாதல் என்று வீணாகிப்போவதுடன் தேங்கிநின்று ஆவியாதல் என்பனவற்றால் அந்த இடங்களில் உப்புக்களைத் தேக்கியும் வருகின்றது. அளவுக்குமிஞ்சி வேகமாக நீரை இறைத்துத்தள்ளுவதால் நன்னீர் நிலைகளுள் கடல்நீர் புகுந்து உப்புநீராகிறது.

அதிகமான இரசாயனப் பாவனை காரணமாகவும் நிலத்தடி நீரின் நச்சுத்தன்மை அதிகரித்து வருகின்றது.

இன்று யாழ். குடாநாட்டில் 1/3 பங்கு மக்களுக்கு பாதுகாப்பான நீர் கிடைப்பதென்பது வெறுங்கானல் நீராகவே உள்ளது. நமது சூழல் மாசுபடாமல் நாம் எவ்வாறு அன்றாடம் செயற்படுகிறோமோ அதேவகையில் நீர் மாசுபடாமலும், விரயமாக்கப்படாமலும், பாதுகாக்கப்படுவதன் மூலமே எமது எதிர்கால சந்ததியினர்களுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கியவர்களாக முடியும்.

மக்களுக்குச் சுத்தமான நீரை வழங்குவதற்காக நீர் விநியோகத் திட்டங்களை ஏற்படுத்துவதாலும், அதற்கு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதாலும் மட்டும் இந்தப் பிரச்சினையை வென்றுவிட முடியாது. இதற்கு நீரைப் பயன்படுத்தும் மக்களினதும் பூரண ஒத்துழைப்பு தேவை என்பதை மறுக்கமுடியாது.

தண்ணீர் இயல்பாகவே தீயை அணைக்கக் கூடியதே. ஆனால் இந்தத் தண்ணீர்தான் இனிமேல் மக்களுக்கிடையே போரை மூட்டிவிடும் எரிபொருளாகவும் இருக்கப்போகிறது.



**க. இராசேந்திரம்**
I.O.M நிறுவனத்தின் முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தர்

# வாக்காளர் பதிவு முறைமையில் மாற்றம் கொண்டுவருவது அவசியம்

## கபே அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

வாக்காளர் பதிவு முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டுமென கபே முன்னணி தேர்தல் கண்காணிப்பு கபே அமைப்புத் தெரிவித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் யூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வாக்காளர் பதிவு இடம்பெறுகின்ற இந்த நடவடிக்கையின் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்துவிடுகின்றனர்.

கணக்கெடுப்பில் பங்கேற்க வாக்காளர்கள் நாட்டம் காட்டாமை மற்றும் வாக்காளர் பதிவு தொடர்பிலான நடவடிக்கைகளை அதிகாரிகள் உரிய முறையில் மேற்கொள்ளாமை ஆகிய காரணிகளினால் இவ்வாறு வாக்காளர் பதிவு துல்லியமான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை ஒவ் வொரு தடவையும் சுமார் 400,000 புதிய வாக்காளர்களை வாக்காளர் இடாப்பில் இணைத்துக் கொள்ளும் அதே வேளை, பெரும் எண்ணிக்கையிலானவர்களின் பெயர்கள் விடுபட்டு போய்விடுகின்றது.

வாக்காளர் பதிவு சரியான முறையில் நடைபெறாவிட்டால் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் தேர்தலை நடாத்த முடியாது என இலங்கையில் தற்போது அமுலில் உள்ள வாக்காளர் பதிவு முறைமை காலம் கடந்ததொன்றாகும் புதிய முறைமை ஒன்றினை அறிமுகம் செய்து துல்லியமாக வாக்காளர்களை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகின்றது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# பௌத்த மதத்தை பாதுகாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

## பிரதமர் தெரிவிப்பு



பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஐந்து மதங்களை வழிபடும் நான்கு இன மக்கள் ஒற்றுமையுடனும் சகவாழவுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

உலகின் வேறு எந்த நாட்டிலும் இவ்வாறான ஓர் சகவாழ்வினை பார்க்க முடியாது. அநேக நாடுகளில் இன, மத மற்றும் மொழிப் பிரிவினைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் நிலவும் சமாதானத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. புலிப் பயங்கரவாதத்தை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் காரணமாகவே சிங்கள இனம் இன்றைக்கும் தலைதூக்கியுள்ளது.

மெய்யான பௌத்தர் என்ற ரீதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் பௌத்த மதத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார். புத்தரின் வழிகாட்டல்களை பின்பற்றும் எவரும் பிழையான வழியில் செல்ல மாட்டார்கள் என்றார்.

அரந்தலாவை பௌத்த பிக்குகள் கொலை தொடர்பான நினைவு நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# பால்மாவுக்கான இறக்குமதி வரி கிலோவுக்கு 87 ரூபாவாக அதிகரிப்பு

பால்மா ஒரு கிலோவுக்கான இறக்குமதி வரி 57 ரூபாயில் இருந்து 87 ரூபாவாக அதிகரித்த போதும், பால்மாவுக்கான விலை குறைவடையவோ, அதிகரிக்கவோ போவதில்லை என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உலக சந்தையில் பால்மாக்களின் விலை குறைவடைந்துள்ளதால், அவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கான சலுகைகள் மட்டுமே இதனால் குறைவடைந்துள்ளதாக அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் சந்தையில் பால்மா விலைகளை அதிகரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி இல்லை எனினும் நிறுவனங்களின் விருப்பத்தின்படி பால்மா விலைகளை குறைக்க முடியும் என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் உலக சந்தையில் பால்மா விலை குறைவடைந்துள்ளதால், அதன் பயனை நாட்டு மக்களுககும் பெற்றுக் கொடுக்குமாறு எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிப்பென்ன நுழைவாயில் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளது. வெள்ள நீரில் இளைஞர்கள் பந்து விளையாடுவதைக் காணலாம்.

# கூட்டமைப்பின் நாடு பிரிக்கும் முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டினை பிரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முயற்சிக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

வட மாகாண சபையினையும் இந்தியாவின் தமிழ் நாட்டினையும் ஒன்றிணைத்து தனித் தமிழர் அரசாங்கமொன்றினை அமைக்கும் முயற்சியினையே வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் இந்திய தமிழ் நாட்டு முதல்வர் ஜெயலலிதாவும் மேற்கொண்டு வருகின்றனர். வடமாகாணத்தில் தமிழ் மக்கள் கூட்டமைப்பிற்கு கொடுத்த வெற்றியைப் போலவே தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் ஜெயலலிதாவிற்கும் வெற்றியை வழங்கியுள்ளனர்.

மத்திய அரசின் பிடியில் இருந்து தனித்து செயற்பட வேண்டும் என்ற ஒரே கொள்கையே இவ் இருவருக்கும் உள்ளது. எனவே அதற்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றி வடக்கில் மட்டுமே உள்ளது. எனினும் அரசாங்கத்தின் வெற்றி நாடு முழுவதும் உள்ளது. சிங்கள மக்கள் அனைவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மட்டுமே விரும்புகின்றனர்.

எனவே, நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் வட மாகாண சபையினை அரசாங்கம் உடனடியாகக் கலைத்து நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும் சர்வதேச விசாரணையொன்றினை ஏற்படுத்தி இலங்கை அரசாங்கத்தை சர்வதேசத்தின் முன் குற்றவாளியாக நிறுத்தும் முயற்சியினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்து வருகின்றது.

இந்தியாவை தனது பிடிக்குள் கொண்டு வந்து வடக்கினை உரிய அதிகாரங்களை பெற்றுக்கொண்டு வடக்கை பிரிக்க முயற்சிக்கின்றனர். இதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்ககூடாது.

தேசத்துரோகத்தினை யார் செய்தாலும் அதற்கான உரிய தண்டனையினை பெற்றுக் கொடுக்க வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டினை பிரித்துப் பயங்கரவாதத்தினை உருவாக்கும் செயற்பாட்டை கூட்டமைப்பினர் செய்வதற்கு இடமளிக்ககூடாது. அவ்வாறு செய்வார்களாயின் நாட்டின் பாதுகாப்பிற்காக கூட்டமைப்பின் உறுப்பினர்களை கைது செய்வதில் தவறில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் வரையறுத்துள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல குற்றச்சாட்டு



சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளை அம்பலப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து கொண்டு அரசாங்கம கல்விக்கான நிதி ஒதுக்கீடுகளை பாரியளவில் வரையறுத்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளில் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் சில நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது

சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்டுப்படுத்தவில்லை என்றால் ஏன் அரசாங்கம் கல்விக்கான நிதி ஒதுக்கீடுகளை குறைக்கின்றது. அரசாங்கப் பாடசாலைகளுக்கு போதியளவு நிதி வழங்கப்படாத காரணத்தினால் மாணவர்களிடம் அதிபர்கள் பணம் திரட்டி நிர்வாகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் அதிபர்களை விடவும் பழைய மாணவர் ஒன்றியங்களின் கரம் ஓங்கியிருக்கிறது. அதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாமையே காரணமாகும். அரசாங்கம் பொதுமக்களை முட்டாள்களாக நடாத்துவதனை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டு மெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலவசக் கல்வியை சீர்குலைக்க போலியான கருத்துக்கள் வெளியீடு

## கல்வி அமைச்சு குற்றச்சாட்டு

நாட்டிற்கு எதிராக செயற்படும் சர்வதேச சூழ்ச்சிகளுடன் ஒன்றிணைந்து நாட்டின் இலவச கல்வி தொடர்பாக போலியான கருத்துக்களை வெளியிடுவதை வன்மையாகக் கண்டிப்பதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியாக செயற்படுத்தப்படவுள்ள மகிந்தோதய தொழிநுட்ப பீட ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு லும்பினி வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால சந்ததியினருக்காக செய்ய வேண்டிய முக்கிய கடமையொன்று உள்ளது.

அவர்களுக்கு வழிகாட்டும் வகையில் இலவச கல்வியை பாதுகாத்து, மேம்படுத்தி அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தரப்பினரின் சூழ்ச்சிகளுக்கு அடிபணிந்து டொலர்களுக்காக செயற்படும் சிலரே இவ்வாறான கருத்துக்களை முன்வைத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வேலணை மத்திய கல்லூரியின் உட்கட்டுமானப்பணிக்கு உதவி

## ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவிப்பு



(வேலணை)

அரசாங்கத்தின் ஊடாக வேலணை மத்திய கல்லூரி உட்கட்டுமான வேலைகளை மேற்கொள்வதற்கான உதவிகளை வழங்குவதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உறுதியளித்துள்ளார்.

யாழ்.வேலணை மத்திய கல்லூரியில் மகிந்த சிந்தனையின் மகிந்தோதய ஆய்வு கூட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் 91 பாடசாலைகள் மகிந்த சிந்தனையின் மகிந்தோதய ஆய்வுகூடத்தினை பெற்றுக் கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், 16 பாடசாலைகள் தொழில்நுட்பபீட ஆய்வுகூடத்தினை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவை தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என நினைக்கின்றேன் என்றார்.

கல்வி அமைச்சு வடமாகாணத்தில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் இச்சந்தர்ப்பத்தில், இந்தத் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப பீட ஆய்வு கூடங்களை மாணவர்கள் பயன்படுத்தி தொழில்நுட்ப வல்லுநர்களாக வேண்டும்.

அவ்வாறு தொழில்.நுட்ப வல்லுநர்கள் ஆவதுடன், அத்துறையில் வேலைவாய்ப்பினையும் பெற்று நாட்டிற்கும் தமக்கும் பெருமையினைத் தேடிக் கொள்ள வேண்டும். அத்துடன், தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம் போன்ற பாடங்களையும் பயின்று உச்சப்பயனைப் பெறவேண்டுமென்று கூறியதுடன், மாணவர்கள் பல துறைகளிலும் முன்னேற பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு அவசியமென்றும் ஆளுநர் தெரிவித்தார்.

அதேவேளை, மகிந்த சிந்தனையின் தொழில்நுட்ப பீட ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், இப்பாடசாலையின் உட்கட்டுமான வசதிகளை வழங்க இருப்பதுடன், அந்த உதவிகள் அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுமென்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மேலும் தெரிவித்தார்.(25)

## புதிய நிர்வாகசபை

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதில் தலைவராக க.மகாதேவன், உபதலைவராக மு.ஜெகதேவன், நிர்வாக சபை உறுப்பினராக க.காங்கேசன், மு.சிதம்பரப்பிள்ளை, ச.சரஸகுமார், மு.பரமேஸவரன் மு.சிவசுந்தரலிங்கம், மு.சண்முகசுந்தரம், க.குணசிங்கம், பு.ராதாகிருஸ்ணன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# கற்றல் ஊக்குவிப்புக்கு நிதியுதவி வழங்கல்



(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வட்டு.கிழக்கு சித்தன் கேணியைச் சேர்ந்த உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவியின் கல்வி ஊக்குவிப்பிற்கென இருபதாயிரம் ரூபா பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மேற்படி மாணவிக்கான நிதியானது சங்க தலைமைக்காரியாலயத்தில் வைத்து மாணவியிடம் வழங்கப்பட்டது.

கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்க்கு வசதி இல்லை என வட்டு.இந்துவாலிபர் சங்கத்திடம் வேண்டுகோளை முன்வைத்து உதவி கோருகின்ற மாணவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மாணவர்களின் கல்விநடவடிக்கை தொடர்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக சங்க கல்விப்பிரிவினர் தெரிவித்தனர். (54)

# கூட்டுறவுதினத்தையொட்டி நிகழ்வுகளை நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

92 ஆவது சர்வதேச கூட்டுறவுதினவிழா நிகழ்வுகளை சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்கள் போன்றோருக்கு பல்வேறு போட்டிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

வழமைபோன்று சிறந்த கூட்டுறவாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்கள் மிக விரைவில் சகல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.




# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட்

# தலைமன்னார், சுழிபுரம் விக்டோரியா சம்பியன்




தலைமன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி




சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி



வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்



வட்டு. இந்துக் கல்லூரி

(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மற்றும் தலைமன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு மாகாண பாடசாலைகளுக்கிடையில் தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டியில் வவுனியா நகர சபை மற்றும் ஓமாந்தை மத்திய கல்லூரி மைதானங்களில் நடைபெற்றது.

அணிக்கு 11 பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி 10 ஓவர்களாக நடாத்தப்பட்டது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும், தலைமன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தலைமன்னார் அணி 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தயாளன் 31, தரன் 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரணவன் நான்கு, வணஜன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் வணஜன் 18, ராஜசுகந்தன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயஷ்ரன் மூன்று, கரன், தனுஜன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற தலைமன்னார் அணி மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய அணியும், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய புதுக்குளம் மகாவித்தியாலய அணி 10 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 63 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மன்னார் சென். சேவியார் ஆண்கள் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்ற புதுக்குளம் மகாவித்தியாலய அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் 70 ஓட்டங்களைப் பெற்றது. சோபிகா 34 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 71 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி 49 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. எந்தவொரு வீராங்கனையும் நிலைத்து நின்று ஆடவில்லை. அத்துடன் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் செல்வரஜினி, நிலானி, சோபிகா, மயூரிகா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். மாகாண மட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் விக்டோரியாக் கல்லூரி தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாகவும் கிண்ணம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை வட்டு. இந்துக் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

(12,93)

# உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?

எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்





வின்சன்ற் என்ஜிமா

## நைஜீரியா சிறு பார்வை

நைஜீரியா நாட்டின் மக்கள் தொகை 17 கோடி. 1962இல் முதன் முதலாக உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் பங்கேற்றது.

1994இல் முதன் முதலாக உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெற்றதுடன் 1994, 1998இல் இரண்டாம் சுற்றுக்கும் முன்னேறியது. 2002, 2010 இலும் உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றதாயினும் முதலாம் சுற்றுடன் வெளியேறியது.

31 வயதுடைய கோல் காப்பாளர் வின்சன்ற் என்ஜிமா (Vincent Enyeama) அணிக்குத் தலைமை தாங்குகிறார். 27 வயதுடைய முன் கள வீரர்,விக்ரர் ஒபின்னா (Victor Obinna) சிறப்பாக விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் இருவருக்கும் இது 2இவது உலகக் கிண்ணப் போட்டியாகும். 21 வயது,அகமட் மூசா (Ahmed Musa) குறிப்பிடத்தக்க முன் கள வீரராவார்.52 வயது ஸ்ரெபான் கெஷி (Stephen Keshi) பயிற்சியாளராவார்.



# காலிறுதியில் நடால்

(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட நடப்பு சம்பியனும் முதல்நிலை வீரருமான ரபேல் நடால் (ஸ்பெயின்) தகுதி பெற்றுள்ளார். நான்காவது சுற்றில் சேர்பியாவின் துசான் லஜோவிக்குடன் நேற்று முன்தினம் மோதிய நடால் 6,1 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இப்போட்டியில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய அவர் 6-1, 6-2, 6-1 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு 4ஆவது சுற்றில் ஸ்பெயின் வீரர் டேவிட் பெர்டர் 6,3, 6,3, 6,7 (5,7), 6,1 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். காலிறுதியில் ஸ்பெயின் வீரர்கள் நடால் , பெர்டர் மோதவுள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னணி வீரர்கள் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா), மிலோஸ் ரயோனிக் (கனடா), எர்னஸ்ட் குல்பிஸ் (லாட்வியா), தோமஸ் பெர்டிச் (செக் குடியரசு) ஆகியோரும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர். மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த 4ஆவது சுற்று ஆட்டத்தில் ஜேர்மனியின் ஆண்ட்ரியா பெட்கோவிக் 1-6, 6-2, 7-5 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் கிகி பெர்டன்சை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா), கார்பைன் முகுருசா, கர்லா சுவாரஸ் நவர்ரோ (ஸ்பெயின்), யூஜெனி பவுச்சார்ட் (கனடா) ஆகியோரும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

# நம்ப முடியவில்லை


நான் சிறு வயது முதல் செரீனாவில் ஆட்டத்தைப் பார்த்து வளர்ந்தவள். அவருடன் களத்தில் மோதக் கிடைத்த வாய்ப்பும் அவரைக் களத்தில் வென்றதையும் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாகவே கருதுகின்றேன் என ஸ்பெயினின் இளம் வீராங்கனை கார்பைன் முகுருஜா (வயது-20) தெரிவித்துள்ளார்.

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் பரிசில் நடைபெற்று வருகின்றது. இதில் இருமுறை கோப்பை வென்றவர் உலகின் முதல் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்.

இம்முறை நடப்பு சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய இவரை, தரவரிசையில் 35ஆவது இடத்திலுள்ள, ஸ்பெயினின் 20 வயது வீராங்கனை கார்பைன் முகுருஜா, நேர் செட்களில் சாய்த்து அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால், வெற்றி பெறலாம் என்று நம்பினேன். அதேநேரம், இரண்டு ஆண்டுக்கு முன் செரீனாவிடம் தோற்றிருந்ததால், சற்று நெருடலாக இருந்தது. இம்முறை, செரீனாவுக்கு எதிராக விளையாடுகிறோம் என்ற எண்ணம் இல்லாமல், போட்டியில் மட்டும் கவனம் செலுத்தினேன். போட்டி முடிந்ததும் என்னிடம் வந்த செரீனா, இதேபோல, மீதமுள்ள போட்டிகளில் விளையாடினால், கோப்பை வெல்லலாம், எனப் பாராட்டினார்.

சமீபகாலமாக பல இளம் வீராங்கனைகள் வந்துள்ளனர். இவர்கள் களத்தில் அசாத்திய திறமையை வெளிப்படுத்துகின்றனர். புதிய தலைமுறை வீராங்கனைகளின் ஆதிக்கம் ஆரம்பமாகிவிட்டது என்று நம்புகிறேன்.



சிறு வயதில் செரீனா விளையாடுவதை தொலைக்காட்சியில் தவறாமல் பார்ப்பேன். இவர் எப்படி சேர்வீஸ் செய்கிறார், பந்தை எப்படி திருப்பி அனுப்புகிறார் என, பார்த்து பயிற்சியில் ஈடுபடுவேன். கடைசியில் இவரை வென்றது மறக்கவே முடியாத அனுபவம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அணிகளின் உற்சாகத்தை தூண்டும் வாசகங்கள்




பிரெஞ் ஓப்பன், ஹொக்கி உலகக் கோப்பை ஆகிய போட்டித் தொடர்களை பின்னுக்குத் தள்ளி இரசிகர்களின் இணையத் தேடலில் முதல் இடத்தைப் பிடித்திருப்பது வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி.

கடினமான தகுதிச்சுற்றுகளைக் கடந்து பிரதான சுற்றுக்கு தகுதி பெறுவதே ஒவ்வொரு அணிகளின் இலட்சியமாக இருக்கும். அப்படி இருப்பினும், பிரதான சுற்றில் 32 அணிகள் இடம் பிடித்துள்ளன. இந்த அணிகள் ஒவ்வொன்றுக்கும், போக்குவரத்து வசதிக்காக ஒவ்வொரு பேருந்து ஒதுக்கப்பட்டுள்ளன. வித்தியாசம் மட்டுமே ஒரு செயலை பரவலாக பேச வைக்கும் என்பதை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு பேருந்திலும் அணிகளை உற்சாகப்படுத்தும் வாசகம் இடம் பெற்றுள்ளது.

இந்த வாசகங்கள் இரசிகர்களின் தேர்வாகும். இதற்காக போட்டி கூட வைக்கப்பட்டது.

இது, சில அணிகளுக்கு தர்மசங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், சில அணிகளுக்கு மிகவும் அதிகபட்ச உற்சாகத்தையும், சிலவற்றுக்கு நம்பிக்கை அளிக்கும் உற்சாகத்தையும் உண்டாக்குமாறு வாசகங்கள் அமைந்துள்ளதுவே அதற்கான காரணம்.

அவுஸ்ரேலிய அணியின் வாசகம், வரலாற்றை நோக்கி எங்கள் பயணம் என நம்புகிறோம். இது, களத்தில் உள்ள அனைத்து அணிகளும் வெற்றிக்காகத்தான் 90 நிமிடங்கள் ஓடுகின்றன. அவ்வாறு இருக்கும்போது, வெற்றி பெறுவோம் என நம்புகிறோம் என்பன போன்ற வாசகங்கள் எதிர்மறையானவை என்று ஆஸி இரசிகர்கள் குரல் 'எழுப்பியுள்ளனர். ஆனால், அவுஸ்ரேலியா கால்பந்து சம்மேளனத்தின் தலைமை செயல் இயக்குநர் டேவிட் கேலோப், இதனை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. மற்ற அணிகளின் வாசகங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். தொடர்ந்து முன்னேறுங்கள் என்று மட்டும் அவர் அறிவுறுத்தியுள்ளார். ஒவ்வொரு அணிகளின் வாசகங்களையும் பார்ப்போம்.

* அல்ஜீரியா: பிரேசிலில் பாலைவனப் போராளிகள்
* ஆர்ஜென்ரீனா: நாங்கள் ஓர் அணி அல்ல் ஓர் நாடு
* அவுஸ்ரேலியா: சாக்ரூஸ்: வரலாற்றை நோக்கி எங்கள் பயணம் என நம்புகிறோம்
* பெல்ஜியம்: எதிர்பாராததை எதிர்பார்க்கலாம்
* போஸ்னியா அன்ட் ஹெர்சிகோவினா: மனதிலும் டிராகன் களத்திலும் டிராகன்
* பிரேசில்: தயாராய் இரு 6ஆவது கோப்பைக்கான நேரமிது
* கமரூன்: சிங்கம் எப்போதும் சிங்கம் தான்
* சிலி: முன்னேறு சிலி, முன்னேறு!
* கொலம்பியா: புறப்பட்டது அணி அல்ல, தேசம்
* கோஸ்டா ரிகா: கால்பந்து எனது உணர்வு என் மக்களே எனது பலம் கோஸ்டா ரிகாவே எனது பெருமை
* ஐவரி கோஸ்ட்: பிரேசிலை நோக்கி படையெடுத்துள்ள யானைகள்
* குரோஷியா: எங்கள் மனதில் உள்ளது தீ குரோஷியாவின் இலக்கு ஒன்றுதான்
* ஈகுவேடார்: ஒரே இலக்கு ஒரே ஆர்வம் ஒரே இதயத்துடிப்பு இதுதான் ஈகுவேடார்
* இங்கிலாந்து: ஓர் அணியின் கனவு, இலட்சக்கணக்கான மக்களின் இதயத் துடிப்பு
* பிரான்ஸ்: முடியாதது பிரெஞ்சு வார்த்தையில் இல்லை
* நெதர்லாந்து: உண்மையான வீரன் ஆரஞ்சு நிற உடை உடுத்துவான்
* ஜேர்மனி: ஒரு நாடு ஒரு அணி ஒரு கனவு
* கானா: கருப்பு நட்சத்திரங்கள்: பிரேசிலில் பிரகாசிக்க உள்ளன
* கிரேக்கம்: வீரர்கள் கிரேக்கர்களைப் போல் விளையாடுவர்
* ஹோன்ட்ராஸ்: நாங்கள் ஒரே நாடு ஒரே தேசம், எங்கள் மனதில் 5 நட்சத்திரங்கள்
* ஈரான்: பெர்சியாவின் கௌரவம்
* இத்தாலி: உலகக் கோப்பையை நீல நிறமாக்க தயாராகு
* ஜப்பான்: சாமுராய், இது போருக்கான நேரம்
* தென் கொரியா: அனுபவித்து ஆடுங்கள் வீரர்களே!
* மெக்ஸிக்கோ: வெற்றி நமதே, எப்போதும் இணைந்திரு
* நைஜீரியா: வெற்றி பெறத் தேவை ஒற்றுமை மட்டுமே
* போர்த்துக்கல்: பழையது வரலாறு புதியது சகாப்தம்
* ரஷ்யா: யாரும் எங்களைப் பிடிக்க முடியாது
* ஸ்பெயின்: சம்பியன் மட்டுமே எங்கள் இதயத்துடிப்பு
* சுவிட்சர்லாந்து: இறுதி நிறுத்தம் 07-13-14 மரகனா (இறுதிச் சுற்று மைதானம்)!
* உருகுவே: 30 இலட்சம் மக்களின் கனவு.... நிறைவேற்று உருகுவே
* அமெரிக்கா: அணியாக இணைந்து ஆர்வத்துடன் வழிநடாத்து.

# பந்து வீச்சில் சந்தேகம்



இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற் பந்துவீச்சாளர் சச்சித்ர சேனாநாயக்கவின் பந்துவீச்சு முறைமை சந்தேகத்திற்குரியது என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இங்கிலாந்துடன் இடம்பெற்ற நான்காவது ஒருநாள் போட்டியின் நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர் ஆகியோர் முறையிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் சேனாநாயக்க சர்வதேச கிரிக்கெட் சபையின் சோதனைகளுக்கு சமூகமளிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றசாட்டு தொடர்பில் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இரண்டு வருடங்களாக சேனாநாயக்க சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் விளையாடி வருகின்றபோதிலும் அவர் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படவில்லையென சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தத் தகவல் அதிர்ச்சியளிப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவிக்கிறது.




கால்பந்து திருவிழா
இன்னும் 8 நாட்கள்

# முதல் போட்டி நடைபெறும் மைதானம் முழுமையாகத் தயாராகவில்லை

(சாவ் பாவ்லோ)

உலக கோப்பை கால்பந்துத் தொடர் ஆரம்பமாக இன்னும் 8 நாட்களே உள்ள நிலையில், முதல் போட்டி நடைபெறவுள்ள சாவ் பாவ்லோ மைதானத்தில் இன்னும் பணிகள் முடியாமல் உள்ளன.

சர்வதேச கால்பந்து (பிபா) கூட்டமைப்பு சார்பில், உலக கோப்பை கால்பந்து போட்டி வரும் யூன் 12ஆம் திகதி முதல் யூலை 13ஆம் திகதி வரை பிரேசிலில் நடைபெறவுள்ளது. மொத்தமுள்ள 64 போட்டிகள், 12 நகரங்களில் நடைபெறவுள்ளன. இதில் நடால், போர்டோ அல்கிரே, சாவ் பாவ்லோ என, மூன்று மைதானங்களில் பணிகள் இன்னும் முடியவில்லை.

இதில் சாவ் பாவ்லோ மைதானத்தில் யூன் 12ஆம் திகதி நடைபெறவுள்ள



முதல் போட்டியில் பிரேசில், குரோஷியா அணிகள் மோதுகின்றன. இங்கு 65,000 பேர் அமர்ந்து போட்டியை இரசிக்கலாம்.

இதில் 40,000 இருக்கைகள் நிரந்தரமானது. மீதமுள்ள 25,000 இருக்கைகள், தற்காலிகமாக அமைக்கப்பட்டு, தொடர் முடிந்ததும் நீக்கப்படும் எனத் தெரிவித்திருந்தனர். ஆனால், பணிகள் இன்னும் முடியாததால், தற்காலிக இருக்கைகளுக்கு, தீயணைப்புத் துறையினர் அனுமதி தர மறுத்துவிட்டனர். இதனால், இங்கு நடைபெற்ற பயிற்சிப் போட்டியை காண, 40,000 பேருக்கு மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டது. போட்டி ஆரம்பமாக இன்னும் 8 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், இன்னும் வேலைகள் முடியாதது பிபா வுக்கு ஏமாற்றத்தை தந்துள்ளது.

ஒருவேளை பணிகளை முடித்தாலும் இருக்கைகள் சோதனை செய்யப்படாத நிலையில் தான், பிரேசில்-குரேஷியா (யூன் 12) அணிகள் மோதும் போட்டிக்கு 65,000 பேர் அனுமதிக்கப்படுவர். இதனால், இரசிகர்களுக்கு சிக்கல் தான்.

# பொதுநூலகமும் யாழ்ப்பாணச் சமூகமும்!

- ஷோபா சக்தி கட்டுரையிலிருந்து.

ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய அமைச்சர்களான காமினி திஸநாயக்க, சிறில் மத்தியு, பெஸ்டஸ் பெரேரா ஆகியோரின் ஆணையின்பேரில் 1981இல் யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்டது. பின்னர் சந்திரிகா



பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில், ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீடும் புனர்வாழ்வு அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீடுமாக மொத்தம் 120 மில்லியன் ரூபா யாழ். பொது நூலகத்தைப் புனரமைக்க ஒதுக்கப்பட்டது.

1944இல் உரும்பிராயில் ஒரு தலித் குடும்பத்தில் பிறந்த செல்லன் கந்தையன் தனது பதினாறாவது வயதில் யாழ். நகரசபையில் ஓர் அடிமட்டத் தொழிலாளியாக வேலையிற் சேர்ந்தார். அவர் அங்கே முப்பத்தெட்டு வருடங்கள் வேலை செய்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட செல்லன் கந்தையன் 1997இல் தேர்தலில் வெற்றிபெற்று மாநகரசபை உறுப்பினராகி 2001இல் யாழ். மாநகர சபையின் துணை மேயரானார். பின்பு 16 ஜனவரி 2002இல் அவர் யாழ். நகரபிதாவாகப் பதவியேற்றார்.

அல்பிரட் துரையப்பா, சிவபாலன், சரோஜினி யோகேஸ்வரன் ஆகிய மேயர்கள் புலிகளால் கொல்லப்பட்டிருந்த உயிர்ப் பாதுகாப்பற்ற கொலைச் சூழலிற்தான் செல்லன் கந்தையன் மேயர் பொறுப்பை ஏற்றிருந்தார்.

பெப்ரவரி 2003இல் செல்லன் கந்தையன் தலைமையில் இயங்கிய மாநகர சபை, ஒதுக்கப்பட்ட 120 மில்லியன் ரூபாய்களிற்குமான நூலகப் புனரமைப்பு வேலைகளை நிறைவேற்றியது. தொண்ணூற்றொன்பது சதவீதமான வேலைகள் நிறைவு பெற்றுவிட்டன எனத் தலைமைக் கட்டட நிர்மாணப் பொறியியலாளர் மாநகர சபையில் அறிக்கை சமர்ப்பித்தார்.

திட்டமிடப்பட்டிருந்த பணிகளில் நூலகக் கட்டடத்திற்கு மின்தூக்கி பொருத்துவது, சிற்றுண்டிச்சாலை அமைப்பது, குளிரூட்டிச் சாதனம் பொருத்துவது போன்ற வேலைகளே எஞ்சியிருந்தன. இந்த மின்தூக்கி, குளிரூட்டி வசதிகளின்மை நூலக வாசிப்பை பாதித்திருக்கப் போவதில்லை. ஏற்கனவே இயங்கிக்கொண்டிருந்த சின்னஞ்சிறிய தற்காலிக நூலகத்திற்குள் இருபத்தியிரண்டு வருடங்களாக அல்லலுற்றுக் கொண்டிருந்த மாணவர்களிற்கும் அறிவுத் துறையினருக்கும் பொதுமக்களிற்கும் யாழ். பொதுநூலகம் மீண்டும் இயங்கத் தொடங்குவது உற்சாகமான செய்தியாக வேயிருந்தது.

ஒன்பது தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களையும், ஆறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களையும், ஆறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களையும், இரண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்களையும் கொண்ட மாநகரசபை புனரமைக்கப்பட்ட நூலகத்தை 14.02.2003இல் திறப்பதெனவும் திறப்புவிழா நிகழ்விற்கு மேயர் செல்லன் கந்தையன் தலைமை வகிப்பதெனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி நூலகத்தைத் திறந்து வைப்பதெனவும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

அவ்வளவுதான்! யாழ்ப்பாணத்தின் ஆதிக்க சக்திகள் ஒன்றுகூடி "லிப்ட் இல்லை, கன்டீன் இல்லை, ஏ.சி இல்லை எப்படி நூலகத்தைத் திறக்க முடியும், அங்கே எப்படிப் படிக்க முடியும்?" எனக் கண்டனங்களைத் தெரிவித்தனர். பலபத்துக் கண்டனத் துண்டறிக்கைகளையும் நகரம் முழுவதும் விநியோகித்தனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றம், யாழ். ஆசிரியர்கள் சங்கம், சர்வதேச மாணவர் பேரவை போன்ற பல அமைப்புகள் நூலகத்தைத் திறக்கக் கூடாது என்று அறிக்கைகளை வெளியிட்டன. உச்சக்கட்டமாக வெகுஜன ஒன்றியத்தினர் யாழ். பொது நூலகத்தைத் திறப்பதைக் கண்டித்து திறப்புவிழா நாளன்று யாழ்ப்பாணம் முழுவதும் பூரண கடையடைப்பும் கரிநாளும் நடாத்துவோமென அறிவித்தனர்.

புலிகள் தொடர்ச்சியாக யாழ். மேயர் செல்லன் கந்தையனை மிரட்ட ஆரம்பித்தார்கள். சூழ்ச்சி வியூகங்கள் வகுக்கப்பட்டன. நூலகத்தைத் திறக்க விடாமற் செய்வதற்கு அத்தனை ஆதிக்க சக்திகளும் கரம் கோர்த்துக் களத்துக்கு வந்தன.

தேசிய நாளிதளான "தினக்குரல்" தனது 16.02.2003 பதிப்பில் செல்லன் கந்தையனைச் சாதி அடையாளங்களுடன் வரைந்த சாதிவெறிக் கேலிச் சித்திரம் ஒன்றையும் வெளியிட்டது. மிகக் கவனமாக இந்தக் கேலிச் சித்திரம் தினக்குரலின் யாழ் பதிப்பில் மட்டுமே வெளியாகியது.

05.02.2003: பதினான்காம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கும் நூலகத்தைத் திறந்து வைப்பதில் அவசரம் காட்ட வேண்டாமென யாழ். மாவட்டப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கூட்டமைப்பினரிடம் பேசினார்.

10.02.2003: யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட இரு இளைஞர்கள் மாலை 6.30 மணியளவில் செல்லன் கந்தையனை அவர் அலுவலகத்திற் சந்தித்துப் பதினான்காம் தேதி திட்டமிட்டபடி நூலகம் திறக்கப்பட்டால் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ந்தது போன்றதொரு இரத்தக்களரியைச் சந்திக்க நேரிடுமென்று மேயரை மிரட்டினர்.

12.02.2003: வன்னியிலிருந்து வந்திருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் சொலமன், இன்னொரு புலி உறுப்பினர் சிறில் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் புலிகளின் முன்னணி அமைப்பான சர்வதேச மாணவர் பேரவையின் அன்றைய தலைவருமான கஜேந்திரன் ஆகியோர் மாநகர சபை அலுவலகத்திற்குள் நுழைந்து நூலகத்தைத் திறக்கக் கூடாதென செல்லன் கந்தையனை எச்சரித்தனர்.

13.02.2003: காலையில் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மாநகரசபை அலுவலகம் சென்று, மேயர் செல்லன் கந்தையனிடமும் சபை உறுப்பினர் முகுந்தனிடமும் பூட்டிய அறையினுள் விவாதித்தார். பின் இளம்பரிதி செய்தியாளர்களிடம் பேசுகையில் "திறப்புவிழா நடைபெறுவதை மக்கள் விரும்பவில்லை. எனவே திறப்புவிழாவை ஒத்திவைக்க வேண்டும். இன்றைய சமாதானச் சூழ்நிலையில் ஏன் ஓர் இரத்தக்களரியை உருவாக்க வேண்டும்? எனவே நூலகத் திறப்புவிழாவை நிறுத்தி வைக்குமாறு மேயரைக் கேட்டுள்ளேன்" என்றார்.

பின் மேயர் செல்லன் கந்தையன் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் "திறப்புவிழாவை நிறுத்துமாறு இளம்பரிதி கேட்டார். நான் மற்றைய சபை உறுப்பினர்களிடம் பேசி முடிவெடுப்பதாக அவருக்குச் சொல்லியுள்ளேன்" என்றார். "நானும் குடும்பஸ்தன்" என்று செய்தியாளர்களிடையே தெரிவிக்கவும் செல்லன் கந்தையன் தவறவில்லை. அன்று மாலையே செல்லன் கந்தையன் தனது மேயர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

நூலகத் திறப்புவிழா புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டதைக் குறித்து வீ.ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு சொன்னார்: "யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் மிகவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த மாநகர சபையின் ஆயுட்காலம் முடியும் வேளையில் உலகமே மதிக்கத்தக்க ஒரு செயலைப் பூர்த்தி செய்து, அதன் பெருமையைப் பெறும் சந்தர்ப்பத்தைப் பறிப்பது மனச்சாட்சி உள்ள எந்தவொரு மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். யாழ் மாநகர சபையின் வளர்ச்சிக்கு செல்லன் கந்தையன் செய்த சேவைகளை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. இந்தப் பெருமையைப் பெறவி[illegible] செல்லன் கந்தையன் அவர்களைத் தடுக்கும் வரலாற்றுத் தவறை என்றாவது ஒருநாள் இவர்கள் உணர்ந்துதான் ஆகவேண்டும்".

யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன் 01.03.2003இல் "டெய்லி மிரர்" பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலிருந்து ஒரு பகுதி: "இந்த நூலகம் திறக்கப்படுவதால் புலிகளுக்கு எதுவித பிரச்சினையுமில்லை. அவர்கள் நூலகம் திறப்பதைத் தடுத்ததிற்குப் பின்னால் வேறொரு காரணமுள்ளது என்றே நான் கருதுகிறேன். நான் இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகத்துள் [illegible] சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவன். யாழ் பொதுநூலகத் திறப்புவிழாக் கல்வெட்டில் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவனின் [illegible] பொறிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை".

செல்லன் கந்தையன் பதவி விலகிய சில மாதங்களிலேயே யாழ் பொதுநூலகம் எதுவித பிரச்சினையுமில்லாமல் திறந்து வைக்கப்பட்டதும் இங்கே கவனிக்கத்தக்கது.

# நம்பிக்கை



ஒருவன் சொல்வதை முழுதும் நம்புபவர் - வைத்தியர்

அவன் சொல்வதை பாதிமட்டும் நம்புபவர் - வழக்கறிஞர்

அதை இரண்டு மடங்காக்கி நம்புபவர் - வருமானவரித்துறை அதிகாரி

அவன் சொல்வதை முழுவதும் நம்பாதவள் - அவன் மனைவி

# ஆமைக் கண்ணீர்!


ஒரு ரஷ்யக் கப்பலின் மாலுமிகள் 150 கிலோ எடையுள்ள கடல் ஆமையைப் பிடித்தார்கள். அன்று ஆமை "சூப்" சாப்பிடலாம் என்ற மகிழ்ச்சியில் அவர்கள் திளைத்திருந்தபோது, "ஆமை அழுகிறது! ஆமை அழுகிறது!" என ஆச்சரியத்தால் கூக்குரலிட்டார் ஒரு மாலுமி. அந்தப் பெரிய ஆமை ஒரு சிறு பிள்ளையைப்போல் உயிர் போவதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கண்ணீர் விடுவதாக எண்ணிய மாலுமிகள் அதன் மீது இரக்கம் கொண்டு கடலிலேயே போட்டுவிட்டார்கள்.

உண்மையில் அவர்கள் அந்த ஆமையின் கண்ணீரைக் கண்டு ஏமாந்துதான் போய்விட்டார்கள். உண்மையில் ஆமை தனக்கு நேர இருக்கும் கதியை நினைத்து அழவில்லை. அது தன் உடலில் இருந்த அதிகப்படியான உப்பைக் கண்ணீராக வெளியேற்றிக் கொண்டிருந்ததை மாலுமிகள் அழுகையாக நினைத்துவிட்டனர்.

முதலை வடிக்கும் கண்ணீரும் இத்தகையதுதான். மற்றும் சில கடல்வாழ் உயிர்களும் இது போல கண்ணீர் வடிக்கும் பழக்கம் உடையவைதான். அவற்றுக்குத் தங்கள் உடம்பில் அதிகமாக இருக்கும் உப்பைக் கண்ணீராக வெ்ளியேற்றத் தனிச் சுரப்பிகள் உள்ளன.



குரங்குகள் அழுவதுபோலக் கூக்குரலிடுமே தவிர அவற்றால் கண்ணீர் வடிக்க முடியாது. அவற்றிற்கு கண்ணீர்ச் சுரப்பிகள் இல்லை.



# கண்ணதாசனும் கருணாநிதியும்!

**க**ண்ணதாசன் தி.மு.க.,விலிருந்து பிரிந்து, ஈ.வெ.கி.சம்பத்துடன், தமிழ் தேசியக் கட்சி துவங்கியபோது, தன், “தென்றல்“ பத்திரிகையில், “வனவாசம்“ என்ற தலைப்பில், தன்னுடைய சுயசரிதையை எழுதி வந்தார். அவர் கூறக் கூற, பாரதி வசந்தன் என்ற துணையாசிரியர் அதை எழுதினார்.

விழுப்புரம் அருகில், ஒரு பொதுக்கூட்டம் அதில் மேடை ஏறிய கண்ணதாசன், கருணாநிதியை, ஒரு மணிநேரம், படுபயங்கரமாக விமர்சித்து விட்டு, களைப்போடு வந்து காரில் ஏறினார். கார் புறப்பட்டது. காருக்குள் இருந்த பாரதி வசந்தனிடம்,

“ஏன் தம்பி, இன்று புதன் கிழமை தானே... இன்று தானே, நாம், வனவாசம் எழுத வேண்டும்...” என்றார்.

“ஆமாம்...”

“இந்த வாரம் எதிலிருந்து துவங்க வேண்டும்?”

“கருணாநிதியுடனான உங்கள் முதல் சந்திப்பு பற்றி எழுதுவதாகக் கூறியிருந்தீர்கள்...”

இதன் பின் கவிஞர், 20 நிமிடம் எதுவுமே பேசாமல் மௌனமாக வந்தார். எப்போதும், ஏதேனும், ஒரு புதிய படைப்பைத் துவங்கும்போது, அவரிடம் இப்படி ஒரு மௌனம் ஏற்படுவது வழக்கம். 20 நிமிடங்களுக்குப் பின், கண்ணதாசனே ஆரம்பித்தார்...

“எவ்வளவு அருமையான நாட்கள் அவை! சேலம் மாடர்ன் தியேட்டரில், அவரை முதன் முதலா சந்திக்கப் போகிறேன் என்று அறிந்தவுடனே, மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். அவரது தமிழின் மீது, எனக்கு அவ்வளவு மோகம். காரணம், அவரை சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைப்பதற்கு முன்பே, அவர் வசனம் எழுதிய, அபிமன்யு படத்தைப் பார்த்தேன். நான் சினிமா ஸ்டுடியோவில் கதை இலாகாவில் வேலைக்குச் சேர்ந்த பின் தான், அபிமன்யுவிற்கு வசனம் எழுதியவர் கருணாநிதி என்றும், படத்தின் டைரக்டர் ஏ.எஸ்.ஏ.சாமி, அந்த வசனங்களை தன் பெயரில் போட்டுக் கொண்டார் என்றும் அறிந்தேன். அபிமன்யு படத்தைப் பார்த்து, அதன் வசனங்களில் மனதைப் பறிகொடுத்து விட்டேன்...

அப்படத்தில் அவர் எழுதிய, “கண்ணன் செய்த சூழ்ச்சி, அண்ணனுக்குத் தெரியவில்லை” மற்றும் “உடைந்த வாளாயினும் ஒரு வாள் கொடுங்கள்” - இப்படி எவ்வளவு வேகமான, விறுவிறுப்பான வசனங்கள் தெரியுமா?

கருணாநிதி மாடர்ன் தியேட்டருக்கு வரப் போகிறார் என்று கூறினர். நான் அவரை சந்திக்க, துடிதுடிப்போடு இருந்தேன். ஆர்வம் ஒரு பக்கம் அச்சம் ஒரு பக்கம். நேரில் பார்த்த போது, அவர் தான், என் கூச்சத்தைப் போக்கி, மிகுந்த வாஞ்சையுடன் பழகினார். அன்று துவங்கிய நட்பு, அதற்குப் பின், பல ஆண்டுகள் வரை தொடர்ந்தது. அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே நான் இருப்பேன். அவர் மீது, எனக்கு அப்படி ஒரு போதை. அவர் தான், எனக்கு கிருஷ்ணன் பஞ்சுவிடம் சிபாரிசு செய்து, பராசக்தி படத்தில், ஒரு காட்சியில் நடிக்கவும் வாய்ப்பு வாங்கித் தந்தார்...” என்று கூறி, பெருமூச்சு விட்டார் கண்ணதாசன். பின், தன் பாணியில், கருணாநிதியை தாக்கி எழுத ஆரம்பித்து விட்டார்.

**- பாரதி வசந்தன் எழுதிய கட்டுரையிலிருந்து.**

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர்

## 4

**- கமெலியா நாதானியேல் -**

**வி**நாயகம் தனது 20ஆம் வயதில் 1985ஆம் ஆண்டு முறைப்படி எல்.ரீ.ரீ.ஈ யில் இணைந்தார். யாழ்ப்பாண குடாநாட்டின் சோரன்பற்று - மாசார் மற்றும் புலோப்பளை - கிளாலி பகுதிகளில் தனது உள்ளூர் இராணுவப் பயிற்சியை பெற்றதாகச் சொல்லப்படுகிறது. அவர் ஆரம்பத்தில் எல்.ரீ.ரீ.ஈயில் “லொஸ் ஏஞ்சல்ஸ்” எனக் குறிப்பிடப்பட்டு வந்த தென்மராட்சி பிரிவில் நிறுத்தப்பட்டிருந்தார். அப்போது திலீபன் என்கிற கேடில்ஸ் தென்மராட்சிக்கு பொறுப்பாக இருந்தார்.

சூசையின் பொறுப்பின் கீழிருந்த வடமராட்சி பிரிவு “கலிபோர்ணியா” என அழைக்கப்பட்ட அதேவேளை ஜொணியின் பொறுப்பின் கீழிருந்த் வலிகாமம் பிரிவு “சிக்காக்கோ” எனவும் அழைக்கப்பட்டது. அந்த நேரத்தில் சதாசிவம்பிள்ளை கிருஸ்ணகுமார் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒட்டுமொத்த எல்.ரீ.ரீ.ஈ பொறுப்பாளராக இருந்தார். விநாயகம் ஆரம்பத்தில் தலைவராக ஏற்றுச் செயல்பட்ட கேடில்ஸ் 1987 பெப்ரவரி 14இல் கைதடியில் இடம்பெற்ற பவுசர் வெடி விபத்தில் பலியானார்.

அதன்பின் தென்மராட்சி குஞ்சன் மற்றும் பாக்கியராஜ் ஆகியோரின் கூட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டது. சில காலத்துக்குப் பிறகு புதிய தலைவராக நரேன் நியமிக்கப்பட்டார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் (1987 ஜூலை 29) பிறகான யுத்த நிறுத்த காலத்தின்போது நரேன் மாற்றப்பட்டு அந்த இடத்துக்கு அப்துல்லா நியமிக்கப்பட்டார்.

மூத்த தலைவர்களான குமரப்பா மற்றும் புலேந்திரன் அதேபோல புதிதாக நியமனம் பெற்ற தென்மராட்சி தளபதி அப்துல்லா ஆகியோர் கைது செய்யப்பட்டு அதன் விளைவாக அவர்கள் உட்பட 12 எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தை தொடர்ந்து இந்திய இராணுவத்துக்கும் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ.இற்கும் இடையில் யுத்தம் வெடித்தது. அப்போது தினேஷ் என்று அறியப்பட்டு வந்த முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அரசியல்துறை பொறுப்பாளரான சுப்பையா பரமு தமிழ்செல்வன் தென்மராட்சிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரது துணைத் தலைவராக தென்மராட்சி மந்துவிலைச் சேர்ந்த பாப்பா நியமிக்கப்பட்டார்.

கேடில்ஸ் தொடங்கி தமிழ்செல்வன் வரையான அனைத்து மாற்றங்கள் இடம்பெறும் வரைக்கும் விநாயகம் தொடர்ந்தும் தென்மராட்சியுடனேயே இணைக்கப்பட்டிருந்தார். அவர் பாப்பாவின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கடமையாற்றியதுடன், அம்பன் - குடத்தனை - வரணி பகுதியிலேயே தங்கியிருந்தார். 1990இல் இந்திய இராணுவம் இலங்கையை விட்டுச் சென்றதும் யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட வடமாகாணத்தின் பெரும்பகுதியின் கட்டுப்பாட்டை எல்.ரீ.ரீ.ஈ தன்வசமாக்கிக் கொண்டது. அப்போது எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு மறுசீரமைக்கப்பட்டு மீளக் கட்டப்பட்டது.

புதிய மாற்றங்களினால் விநாயகம் எல்.ரீ.ரீ.ஈயின் உளவுத்துறையான பொட்டு அம்மான் தலைமையிலான பாதுகாப்பு மற்றும் புலனாய்வு சேவைகள் (ரி.ஓ.எஸ்.ஐ.எஸ்) அமைப்புக்குள் உள்வாங்கப்பட்டார். அவர் இரண்டாம் லெப்ரினன்ட் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டு, அவருக்கு ஜயன்னா எனும் புதிய இயக்கப் பெயரும் வழங்கப்பட்டது.

விநாயகம் என்கிற ஜயன்னா 1990 - 93 வரை பொட்டு அம்மானின் கீழ் நேரடியாகப் பணியாற்றினார். தலைமைத்துவ பக்தியின் மூலம் அவர் தன்னை பொட்டு அம்மானின் பிரியத்துக்குரியவராக மாற்றிக்கொண்டார். தற்பொழுது மேற்கில் வசிக்கும் ஒரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் விநாயகத்தின் ஈடு இணையற்ற பக்தியை பற்றிக் குறிப்பிடும்போது, “ஜயன்னா பொட்டுவின் அலுவலகத்தில் ஒரு பியோனைப் போலவும், அவரது வீட்டில் ஒரு வேலைக்காரப் பையனைப் போலவும் இருந்தார்” எனக் கூறினார்.

1994இல் விநாயகம் லெப்ரினன்ட் ஆகவும், வவுனியா மாவட்ட எல்.ரீ.ரீ.ஈ உளவுத்துறை தலைவராகவும் பதவி உயர்த்தப்பட்டு வவுனியாவுக்கு மாறுதல் செய்யப்பட்டார். 1996இல் அவருக்கு வடக்கு ம்ற்றும் வட மத்திய மாகாணக் காடுகளில் உளவு பார்த்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களுக்குள் ஊடுருவுவதற்கு ஏற்ற காட்டுப் பாதையை கண்டுபிடிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் 1997இல் கொழும்பு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் நடக்கும் அனைத்து இரகசிய



செயல்பாடுகள் மற்றும் கொலைகளுக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ இராணுவ புலனாய்வுத் தலைவர் சாள்ஸ் உடன் ஒருங்கிணைந்து பணியாற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அத்தகைய செயற்பாடுகளை திட்டமிட்டு நிறைவேற்றுவதற்கு ஏற்ற தயாரிப்புகளை மேற்கொள்ளும் முக்கிய இடங்களாக வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் இருந்தன.

அப்போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கான புலனாய்வு பிரிவுத் தலைவராக ரமணனும், மற்றும் வவுனியா மாவட்ட புலனாய்வு பிரிவுத் தலைவராக விநாயகமும் இருந்தனர், தங்களுக்கு பொறுப்பான பகுதிகளுக்கு தேவையான தளபாடங்களை இவர்களே கவனித்து வந்தனர். ரமணன் மற்றும் விநாயகம் ஆகிய இருவரும் அந்த நேரத்தில் எல்.ரீ.ரீ.ஈ யினால் நடத்தப்பட்ட பல கொலைகளுக்கான தயாரிப்பு பணிகளை மேற்கொள்வதில் முக்கிய பங்கினை வகித்தார்கள்.

1999இல் விநாயகம் கப்டனாகப் பதவி உயர்த்தப்பட்டு புதிய கடமைகளுடன் பாரிய கொழும்பு பிரதேசத்துக்கு மாற்றப்பட்டார், நீர்கொழும்பு பகுதியில் தங்கியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக் காலப் பகுதியில் விநாயகம், கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வேதேச விமான நிலையத்தை 2001 ஜூலை 12இல் எல்.ரீ.ரீ.ஈ தாக்குதல் நடத்துவதற்கான அடிப்படை வேலைகள் யாவற்றையும் நிறைவேற்றியிருந்தார். விமானநிலையத் தாக்குதலுக்கான நற்பெயர் அவருக்கு கிடைத்தது. பின்னர் அவர் வன்னிக்கு திரும்ப அழைக்கப்பட்டு மேஜராகத் தரமுயர்த்தப்பட்டார்.

2002இல் ஒஸ்லோ அனுசரணையுடனான யுத்த நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகு, வன்னிக்கு வெளியே இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அதேபோல, இலங்கைக்கு வெளியே வெளிநாட்டிலும் பணியாற்றும் செயற்பாட்டாளர்கள் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்வதற்காக எல்.ரீ.ரீ.ஈ உளவுத்துறையில் ஒரு விசேட பிரிவு உருவாக்கப்பட்டது. அந்த விசேட உளவுத்துறை பிரிவு “வெளியக - உள்ளக புலனாய்வு துறை” என அழைக்கப்பட்டது. இந்த விசேட பிரிவுக்கு விநாயகம் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சமாதான பேச்சுக்களுக்காக ஐரோப்பாவுக்குச் சென்ற எல்.ரீ.ரீ.ஈ தூதுக் குழுவில் ஒரு போலிக் கடவுச்சீட்டில் இவரும் உடன் சென்று தமிழ் புலம் பெயர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்காக பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் செய்துள்ளார்.

(தொடரும்)

# மண்ணைவிட்டு புலம் பெயர்வதால் இளைஞர்களின் விகிதாசாரம் வீழ்ச்சி

## சந்திரகுமார் எம்.பி.கவலை



(கிளிநொச்சி)

எமது இனத்தின் மிகக் குறைந்த விகிதத்தினரே இன்று எமது சொந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இங்கு வாழ்பவர்களேனும் புலம் பெயர்ந்து செல்லாமல் எமது மண்ணில் எமது இனத்தின் இருப்பை தக்கவைப்பதற்கு முயற்சிக்கவேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் சுமார் 16 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பச்சிலைப் பள்ளி முகாவில் இளம்பிறை முன்பள்ளி கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரால் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது நாட்டில் வாழ்பவர்களேனும் தொடர்ந்தும் புலம் பெயர்ந்து செல்லாமல் வாழக் கூடிய மனப்பக்குவத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் இன்று பெரும்பாலான இளைஞர்கள் வெளிநாட்டுக் கனவுகளுடனேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

இன்று மாதாந்தம் வெளிநாடுகளுக்கு பயணித்துக் கொண்டிருக்கும் இளம தலைமுறையினரின் எண்ணிக்கைகளை நோக்கினால் எமது சமூகத்தின் எதிர்கால இருப்பை கேள்விக்குறியாக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

அதிகளவான இளம் தலைமுறையினர் புலம் பெயர்ந்து கொண்டிருப்பதால் சொந்த மண்ணில் எமது இனத்தின் விகிதாசார அதிகரிப்பும் வீழ்ச்சியடைகின்றது.

ஆகவே இந்த அபாயத்தை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்று எமது தேசத்தில் சுமூகமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இளம் தலைமுறையினருக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடிய சூழல் படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகின்றது. மீள்குடியேற்றத்திற்கு பின்னர் இன்று வரை ஆயிரக்கணக்கான இளம் தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்தும் எமது தேசத்தில் அனைத்து வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே எமது இளம் தலைமுறையினர் தமது சொந்தமண்ணில் நம்பிக்கையுடன் வாழத் தலைப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், எஸ்.எ.எச்.நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் யேசுதாசன், கிராமசேவையாளர் வல்லிபுரம், முகாவில் அ.த.க பாடசாலையின் அதிபர் றூபகுமார் ஆகியோரும் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள், பொதுமக்கள், முன்பள்ளிச் சிறார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# விசேட கலந்துரையாடல்

(அச்சுவேலி)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தரம் 11 இல் கல்வி கற்கும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக் கான விசேட கலந்துரையாடல்கள் கல்வி வலய அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்று வருகின்றன.

எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இம் மாணவர்களின் தற்போதைய கல்வி நிலை தொடர்பாக ஆராயும் பொருட்டு இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இக்கலந்துரையாடலின் போது மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் அழைக்கப்பட்டு அவர்களது பிள்ளைகளது கல்வி நிலை மற்றும் ஒழுக்கம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மேலும் பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர்கள் எத்தகைய பங்களிப்பிளை வழங்க வேண்டும் என்றும் அது எவ்வகையில் மாணவர்களுக்கு பயன் மிக்கதாக அமையும் என்பது பற்றியும் தற்போது மாணவர்கள் எதிர்நோக்கி வரும் சமூகம் சம்பந்தமான பிரச்சினைகளிலிருந்து அவர்களை விடுவித்து எப்படி நல்வழிப்படுத்துவது எனவும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றும் அதிகாரிகளினால் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் வருகின்றன. (03)

# சாரதி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க அமைச்சின் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கு சாரதி (தரம் III) களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

க.பொ.த (சா/த்) பரீட்சையில் சிங்களம், தமிழ், கணிதம் உட்பட சித்தியடைந்தவர்கள், அனைத்து வித வாகனங்களும் செலுத்தக் கூடிய வாகன அனுமதிப்பத்திரம் பெற்று 3 வருட அனுபவமுடைய வயது 18 - 45 இற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி நாட்டின் எப்பாகத்திலும் கடமைபுரிவதற்குரிய உடல், உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சையுடன் பிரயோகப் பரீட்சையும் இடம் பெறும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை இல. 758, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 09 என்ற முகவரிக்கு பதிவுத்த தபாலில் முன் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். (105)

# தீராத நோய் மாற்றும் நீராவியடிக் கணநாதா!

"கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்"



வினை தீர்க்கும் விநாயகனே! வேழமுகத்தோனே! கஜனே!
விக்கினங்கள் வராமல் காத்தருள்வாய் கணபதியே!
உனைத் தினமும் நாம் பணிய உன் கோயில் வந்தோம்
ஊர் கூடி விழாவெடுத்தும் அருள்புரியத் தாமதமேன்?
தினையளவும் துன்பமின்றி இவ்வுலகில் நாம் வாழ
தீராத நோய் மாற்றும் எம் நீராவியடிக் கணநாதா!
பனைவளம் நிறை யாழ் மண்ணில் பாதகங்கள் போக்கியே
பரமபதந்தருள்வாய் பாணை வயிற்றோனே சரணம்!

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய மூன்றாம் நாள் திருவிழா இன்றாகும்.

# முரசின் இன்றைய பலன்



(04.06.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் வைகாசி மாதம் 02 ஆம் திகதி.
ஷஷ்டி/ மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம். காலை 6.46 வரை. பின் மகம்.
இராகு காலம் 11.52-1.22 வரை. சுபநேரம் 04.22- 05.52 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கலப்படம் செய்யப்பட்ட பொருளை விற்பனை செய்ய முயன்றவேளை முரண்பாடு ஏற்படல். பிளவுபட்டிருந்த சகோதர உறவு நீண்டகாலப் பொழுதின் பின் சமூக நிலைக்கு வரல். |
| ரிஷபம் | விவாகம் கைகூடியதால் வெளியூர் பயணத்திற்கு ஆயத்தம் செய்தல். தொலைந்து போய்விட்டதென நம்பப்பட்ட சான்றிதழ் கைக்கெட்டியதால் மகிழ்வு. |
| மிதுனம் | பதவியில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் தற்போதைய சம்பளம் மிகையாக இருப்பதினால் வந்த பதவியை ஏற்க மறுத்தல். விழாவில் தம்பதியர் சகிதம் கலந்து சிறப்பித்தல். |
| கடகம் | பணப்பிரச்சினை ஏற்பட்டவேளை சுமூகமான பேச்சு வார்த்தை மூலம் பெற்றுக் கொள்ளல். அதீத செயற்பாட்டால்கடமைகளை நிறைவேற்றுவதில்அசௌகரியம்ஏற்படல். |
| சிம்மம் | போலியான லேபிள் ஒட்டிவிற்க முயன்றதால் வாடிக்கையாளர் மத்தியில்ரகளை ஏற்படல். எதிரியினால அடிக்கடி பயமுறுத்தப்பட்டதனால் மனச்சிதைவு நோய்க்கு ஆளாதல. |
| கன்னி | வியாழசுகம் கிட்டி வருவதினால் கைவிடப்பட்டிருந்த பயணத்தை மீண்டும் தொடரமுயலல். முறைதவறிய காதல் விவகாரத்தினால் குடும்பத்தில் பூகம்பம் வெடித்தல். |
| துலாம் | கொந்தளிப்பான மனநிலையில் இருந்ததால் பணி நிறைவேற்றுகையில் தவறுகள் ஏற்படல். முதலீடு இல்லாத தொழில் ஆரம்பிக்க நண்பர்கள் உதவுவர். |
| விருச்சிகம் | வெளிநாடு சென்று கற்கவிரும்புவோருக்கு சாதகமான காலம் கனியப்போகின்றது. ...குந்த ஆலோசனைகளை மேற்கொண்டு திடமான முடி...னை எடுப்பது நன்று. |
| தனுசு | பிள்ளைகளின் நடவடிக்கையினால் அவமானம் ஏற்படும் சூழல் உண்டாகும். தேகநலனில் போதியளவு அக்கறை எடுப்பதினால் நோயின் ஆக்கிரமிப்பு அற்றுப்போகும். |
| மகரம் | பொதுவாழ்வில் உள்ளவருக்கு செல்வாக்கில் எதிர்பாராத சரிவு ஏற்படலாம். தம்பதியருக்கிடையே நிலவிக் காணப்பட்ட கருத்து முரண்பாடுகள் விலகும். |
| கும்பம் | தொழில் முயற்சியை முன்னிட்டு வங்கியில் கடன் பெற விண்ணப்பம் சமர்ப்பித்தல். பழைய ஒப்பந்த வேலை முடிவுக்கு வருவதினால் புதியதை நாடவிரும்புதல். |
| மீனம் | கிடைக்காது என எண்ணியிருந்த தரகுக்கூலி வாய்ச் சாதுரியத்தினால் கிட்டிவிடல். கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட அவமானம் பற்றி சகித்துக்கொள்ளல். |






போதைப்பொருளை ஒழித்து நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் கடந்த சனிக்கிழமை காலை கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் இடம்பெற்றபோது... (18)

# கல்வியோடு கலாசாரத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும்

## – உதயன் எம்.பி. தெரிவிப்பு –



(வேலணை)

எம்மாணவ சமுதாயம் கல்வியிலும் கலாசாரத்திலும் செழித்தோங்கி வளர வேண்டும். அதிகளவிலான சான்றோர் பெருமக்களையும் துறைசார் அறிஞர்களையும் வளர்த்த எம் தீவக தேசம் இன்று மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்திருக்கிறது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வேலணை மத்திய கல்லூரியில் நிறுவப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்பவியல் ஆய்வு கூடத்தினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக தேசம் கல்வியில் இன்று மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்திருக்கிறது இயற்கைச் சூழலும் சில செயற்கை காரணிகளும் எம் தீவக தேசத்தின் கல்வி வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தினாலும் அதனையும் தாண்டி இப்போது வெற்றி நடைபோடுகின்றது. இதற்கான புறக்காரணிகளை அகற்றி காணப்படும் தடைகளையும் தகர்த்தெறிந்து இக்கல்விச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டிய கடப்பாடும் கடமையும் எமக்கு இருக்கின்றது.

அதற்கான சூழலினை மேன்மை தாங்கிய ஜனாதிபதியின் சிந்தனையில் உதித்ததே இந்த மகிந்தோதய திட்டமாகும்.

வறுமை ஒருநாளும் கல்விக்குத்தடையாக இருக்காது என்று பல தடவை எம் தீவக தேசத்தின் மாணவ சமுதாயம் நிரூபித்திருக்கின்றது.

எம் தேசத்தின் கல்வி யில் உள்ள தடைகளை அகற்றுவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உழைத்து வருகின்றார். இதனடிப்படையில கல்விக்கான எந்த வித தடைகளையும் அகற்றி எதிர்காலச் சந்ததியினரை எமது நாட்டின் சிற்பிகளாக மாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் ஆகியோர் கலந்து கொணடனர்.

# புள்ளிப்பகுப்பாய்வை அனுப்புமாறு அறிவிப்பு

(அச்சுவேலி)

தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்காக கடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாண கல்வி வலய விஞ்ஞான கல்விப் பிரிவினரால் நடாத்தப்பட்ட விஞ்ஞானம் (பௌதிகவியல், தரம் 10,11) பாடப் பரீட்சையின் புள்ளிப் பகுப்பாய்வுகளினை இன்று கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு அனைத்துப் பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெற்ற இப்பரீட்சைகளின் பகுப்பாய்வினை ஏற்கனவே ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு மாதிரிக்கு அமைய தனித்தனியாக தயாரித்து அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது

இப்பகுப்பாய்வுகள் கிடைக்கப் பெற்றதும் அனைத்துப் பாடசாலைகளினதும் பகுப்பாய்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு கோட்ட ரீதியாகவும், வலய ரீதியாகவும் மாணவர்கள் பெற்ற சித்தி வீதத்திற்கமைய பாடசாலைகள் தரபபடுத்தப்பட்டு வலயககல்வி அலுவலகத்தின் இறுதிப்பகுப்பாய்வு அறிக்கைகள் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# பரிசளிப்பு விழா


(கிளிநொச்சி)

கிளி.பூநகரி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.ஆர் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கே.முருகவேல், பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும விருந்தினர்களின் உரையும் இடம்பெறவுள்ளது. (112)



யாழ்.கொட்டடி, கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் வருடா வருடம் நடாத்தும் சித்திரை புத்தாண்டு விழாவில் வழங்கப்படும் சமூகதிலகம் விருது பிரதம விருந்தினர் பேராசிரியர் கே.தேவராஜாவால் கலைமாமணி கிரகரிகிறிஸ் தோப்பருக்கு வழங்கப்படுவதைக்காணலாம். (68)

# ஆயுர் வேதம்



## மயக்கத்தை ஏற்படுத்தும் கசகசா

வயது முதிர்வின் காரணமாகச் சிலருக்குத் தூக்கம் வருவதில்லை. இரவு உணவுக்குப் பின் ஒரு தேக்கரண்டி அளவில் கசகசாவை வாயில் போட்டு மென்று, படுக்கைக்குச் செல்லும் முன் இளஞ்சூடான வெந்நீர் குடித்துவிட்டுப் படுத்தால் நல்ல தூக்கம் வரும்.

போஸ்தக்காயின் உள்ளேயுள்ள விதை இது. குடற்புண்ணை ஆற்றும், உடலிற்கு வலிவு தரும். இதனைப் பசுவின் பால் விட்டு அரைத்துப் பிழிந்து பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம். கஞ்சியாக்கிப் பருகலாம். தூக்கமின்மை, வயிற்றில் கிருமி, தினவு, சீதமும் இரத்தமும் கலந்த கடுப்பு, சளி ஆகியவற்றுக்குக் கஞ்சியாக்கிச் சாப்பிடலாம்.

கசகசா, வால் மிளகு, வாதுமைப் பருப்பு, கற்கண்டு இவற்றைச் சம அளவு சேர்த்து இடித்துத் தேன் நெய் போதுமான அளவு சேர்த்துச் சாப்பிட்டால், உடல் மளமளப்புடன் வலிவு பெறும். சுக்கில விருத்தி ஏற்படும்.

மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் அடிவயிற்று வலிக்கு மாதவிடாய் காலத்திற்கு முன் ஒருவாரம் இதனைப் பாலில் அரைத்துக் கலக்கிச் சாப்பிடலாம்.

வாதுமைப் பருப்பையும் 3 முதல் 5 கசகசாவையும் (அரைத் தேக்கரண்டி) பசுப் பாலில் அரைத்துக் காய்ச்சிச் சாப்பிட, பிரசவித்த பெண்களுக்குத் தாய்ப்பால் பெருகும். பொதுவாக உடல் வலிமை அடையவும் பருமனாகவும் காங்கை தணியவும் ஏற்ற பானம்.

தனித்துக் கசகசாவை ஊற வைத்து அம்மியில் அரைத்து நீர் விட்டுக் குழப்பிப் பால் பிழிந்து அடுப்பிலேற்றிக் காய்ச்சிக் கொதி வந்ததும் இறக்கி, பால், சீனி சேர்த்துச் சாப்பிடலாம். பருவத்திற்கு வரும் சிறு பெண்களின் வளர்ச்சிக்கும் உடல் புஷ்டி வலிவு பெறவும் ஏற்ற காலை உணவு இது.

கசகசாவை முதல் நாளிரவு ஊற வைத்துக் காலையில் அரைத்துத் தேங்காய்ப்பால், மோர், தயிர், வடித்த கஞ்சி, காய்ச்சிய பால் இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் கலக்கி உடலில் பூசிக் குளிப்பதால் அரிப்பு குறையும். பொலிவு, மளமளப்பு அதிகமாகும். இத்துடன் பாசிப் பருப்பையும் சேர்த்து உபயோகிக்கலாம்.

பாவப்ரகாசர் எனும் முனிவர் கசகசாவைப் பற்றிக் கூறும்போது, போஸ்தக்காயின் மேலோட்டுப் பகுதியை பச்சையாய் இருக்கும்போது கீறினால் வரும் பாலை காயவைத்து நன்றாகத் தூளாக்கித் தேன் குழைத்து சாப்பிட்டால் பேதியை நிறுத்துமென்றும், மார்பில் சளி சேர்ந்து ஏற்படும் இருமலை குணப்படுத்திவிடுமென்றும் கூறியிருக்கிறார்.

குளிர்ச்சி தரும் கசகசாவை மசாலாப் பொருட்களுடன் உணவில் ருசி சேர்ப்பதற்காக அரைத்துச் சேர்ப்பது வழக்கத்தில் உள்ளது. ஆனால் இதனுடைய அளவு கூடுமேயானால் மயக்கத்தை ஏற்படுத்தும். கசகசாவிற்கு மயக்கத்தை ஏற்படுத்தும் தன்மை இருப்பதால் வளைகுடா நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், விடாது அழும் குழந்தைகளுக்கு கசகசாவை நன்றாக அரைத்து, குழந்தையின் தொப்புளைச் சுற்றித் தடவினால், அழுகை குறைந்து குழந்தை நன்றாகத் தூங்கும்.

பத்துக் கிராம் கசகசாவுடன், ஒரு துண்டு கஸ்தூரி மஞ்சள், ஒரு பிடி வேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து அம்மைத் தழும்புகள் ஏற்பட்ட முகப்பகுதிகளில் பூசினால் தழும்புகள் மறையத் தொடங்கும்.

வயிற்றுப்போக்கு ஏற்படும் நிலையில் சிறிதளவு கசகசாவை எடுத்து வாயில் போட்டு நன்றாக மென்று கொஞ்சம் தண்ணீர் குடித்தால் வயிற்றுப்போக்கு குறையும்.

---

## வாழை

**வாழை இலை:** இலையிலிருந்து குருத்தைப் பிரித்து எடுத்து தீப்புண் ஏற்பட்ட இடத்தில் கட்டினால் புண் விரைவில் ஆறும். வாழை இலையில் சாப்பிட்டால் கூந்தல் நரைக்காது. முகம் பளபளப்பாக இருக்கும்.

**வாழைப்பூ:** பூவை சமைத்து சாப்பிட்டால் வெள்ளைப்படுதல், பித்தம், ஆசனக் கடுப்பு, எரிச்சல் முதலியவை நீங்கும்.

**வாழைப்பிஞ்சு:** அதிக மூத்திரம், ரத்த மூலம், அடி வயிற்று ரணம் ஆகியவை தீரும்.


**வாழைக்காய்:** இரத்தவிருத்தியை உண்டாக்கும். உஷ்ண இருமல், பித்தவாந்தி, வாயில் நீர் ஊறுதல், பித்த ரோகம் நீங்கி பசி அதிகரிக்கும்.

**வாழைப்பழம்:** மலத்தை இளக்கும். சூட்டைத் தணிக்கும்.

**வாழைப்பட்டை:** வாழைப்பட்டை தீக்காயங்களுக்கு நல்லது. இயற்கை குளிர்சாதனப் பெட்டியாக அபூர்வ மூலிகைகளை இதனால் ஆன பெட்டியில் வைத்துப் பாதுகாப்பார்கள்.

**வாழைத்தண்டு:** இதை உணவில் அடிக்கடி சேர்த்தால் சிறுநீரகங்களுக்கு மிகவும் நல்லது.

# இந்திய வீட்டுத்திட்டத்தை விரைவுபடுத்த பணிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் இந்திய அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத் திட்ட செயற்றிட்டங்களை விரைவுபடுத்தி துரிதப்படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதுறை சார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கிறின் கிறாஸ் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, கருத்துத் தெரிவித்த அமைச்சர் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அவை குறித்து ஆரா யப்பட வேண்டியுள்ளது.

அந்தவகையில், நேற்றுமுன்தினம் இந்த சந்திப்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் இந்திய அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாட முடியும்.

என்னுடைய தரப்பிலிருந்து தவறான அணுகுமுறைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என உறுதிபடத் தெரிவித்த அமைச்சர் என் சார்ந்தோர் ஊடான இடையூறுகளுக்கும் வாய்ப்பில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, இந்திய வீட்டுத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவின் போது அரச உத்தியோகத்தர்கள் நியாயமாகவும் உண்மையாகவும் செயற்பட்டு பயனாளிகளை தெரிவு செய்வதுடன், உண்மையோடும் வெளிப்படைத் தன்மையோடும் செயற்படும் அதே வேளை, அரசின் கொள்கைப்படியான பொதுவிதி கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்திய வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தரும் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான உதவித் திட்டங்களை கோரவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இவ்விசேட கலந்துரையாடலில் இந்திய தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் ஜஸ்ரின் மோகன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலால உள்ளிட்ட இருமாவட்டங்களினதும் பிரதேச செயலர்கள் திட்டமிடல் பணிப்பாளர்கள் உடனிருந்தனர்.

# உப்பளத்தின் தொழிற்துறைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை





(ஆனையிறவு)

ஆனையிறவு உப்பளத்தின் தொழிற்துறைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

ஆனையிறவு உப்பளத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தார். இதன்பிரகாரம் ஆனையி றவிலுள்ள உப்பு வயல்களை மீளப்புனரமைத்து அவற்றில் கடல் நீரைத்தேக்கி உப்பு உற்பத்திக்கான நடவடிக்கைகளை முனனெடுக்குமாறு பணித்துள்ளார். இதனடிப்படையில் இம்மாதம் நடுப் பகுதியில் உப்பு வயல்களில் நீரை சேமித்து தொழிற்துறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் வரைபடங்கள் ஊடான விளக்கத்தை துறைசார்ந்தோருடன் கேட்டறிந்து கொண்டார். இதன் போது அமைச்சின் செயலாளர் சிவ்ஞான சோதி, மத்திய நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் லக்சிறி டி சில்வா, திட்டமிடல் பொறியியலாளர் கிருஸ்ணரூபன் உள்ளிட்ட துறைசார்ந்தோர் உடனிருந்தனர்.

# மின்பாவனை நிலைய பணியாளர்கள் சந்திப்பு



இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின்பாவனையாளர் நிலைய பணியாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் இச்சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.இதில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இளைஞர் யுவதிகளின் எதிர்கால வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அதனூடாக அவர்களுக்கு சந்தோசமான வாழ்வை பெற்றுக் கொடுப்பதே எமது நோக்காகும்.

எனவே, கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பங்களை அனைவரும் சரியாகவும் திறமையாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எமது மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்காவே நாம் இணக்க அரசியலை தெரிவு செய்து அதன் வழியில் பயணித்து வருகின்றோம். நீங்கள் கடமைபுரியும் இடங்களில் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். உயரதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் அதே வேளை, ஒருவருக்கு ஒருவர் மதிப்பளிக்கவும் வேண்டும் என்றார்.

# பேஸ்புக்கால் 63 வயது முதியவரை கரம்பிடித்த 17 வயதுச்சிறுமி

63 வயதான பேஸ்புக் காதலனை கரம் பிடித்த 17 வயதான சிறுமி ஒருவர் தொடர்பிலான தகவல்கள் மொரட்டுவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

சமூக வலைத்தளமான பேஸ்புக் (முகநூல்) ஊடாக 60 வயதான வயோதிபர் ஒருவருக்கும் 14 வயதான் சிறுமி ஒருவருக்கும் காதல் மலர்ந்துள்ளது. சுமார் மூன்றாண்டுகள் இவர்களது காதல் உறவு பேஸ்புக் ஊடாக தொடர்ந்துள்ளது.


அதன் பின்னர் குறித்த சிறுமி, பெற்றோரின் விருப்பதிற்கு மாறாக வீட்டை விட்டு வெளியேறி இந்த வயோதிபருடன் குடும்பம் நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயோதிபர் தமது பெயர் மற்றும் வயதை மறைத்து சிறுமியை ஏமாற்றியுள்ளார்.

அண்மையில் கண்டி நகரில் முதல் தடவையாக ஒருவருக்கு ஒருவர் சந்தித்துக் கொண்டதாகவும், வயோதிபருடன் சிறுமி சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். எனினும், சிறுமி, வயோதிப காதலனை விட்டு வில்கி வர மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

# சீரற்ற வானிலையால் 5000 பேர் பாதிப்பு

## பலியானோர் தொகை 19 ஆக உயர்வு



(கொழும்பு)

சீரற்ற வானிலையால் இதுவரையில் சுமார் 5,000 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும இதுவரை 19 பேர் பலியாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணப்பணிகள் சீராக முன்னெடுக்கப்படுக்கின்றது.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு தேவையான நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு 10 குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட மீட்புப் பணிகளில் வெள்ளத்தில் மூழ்கியிருந்த 87 பேர் காப்பாற்றப்பட்டுள்ளார் என்றார்.

பெலவத்த பகுதியில் 60 பேரும், அகலவத்த பகுதியில் 13 பேரும், வெலிப்பனை பகுதியில் 10 பேர் மற்றும் பிட்டிகல பகுதியில் 4 பேரும் மீட்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவசர நிலைமைகளின் போது சேவைகளை வழங்குவதற்கு இரண்டு ஹெலிகொப்டர்கள் கட்டுகுருந்த விமானப்படை முகாமில் தயார் நிலையில் உள்ளது.

நிவாரணப் பணிகளுக்காக சுமார் 500 இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் மரணச்சடங்குகளுக்காக 15 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனர்.

# படையினருக்கு வழங்கிய வாக்குறுதிகள் மீறப்படுகிறது

## கூறுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

படைவீரர்களுக்கு இராஜமரியாதை அளிப்பதாக அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் எல்லாம பொய்யானவை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டை பாதுகாத்த படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முக்கிய பிரபுக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்குவதாக இந்த அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது

படைவீரர்களின் பெற்றோருக்கு 750 ரூபா கொடுப்பனவு வழங்குவதாகத் தெரிவித்த போதிலும், தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு மட்டுமே இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

தேர்தல் காலத்தில் அரசாங்கம் அளித்து வரும் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை படைவீரர்களுக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்படும் நலத்திட்டங்கள் குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பிய போதிலும அதற்கு உரிய பதிலளிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வனங்களின் எண்ணிக்கை 2020 இல் 35 ஆக உயரும்


(கொழும்பு)

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் நாட்டின் வனப் பிரதேசங்களின் எண்ணிக்கையை 35 ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுற்றாடல் மற்றும் மாற்று வலுவுற்பத்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாளை நினைவு கூரப்படவுள்ள உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டனர்.

கிராமசேவையாளர் பிரிவுகளின் ஊடாக வனப்பாதுகாப்பு குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வனப்பகுதிகளில் இடம்பெறும் முறைகேடுகளை தவிர்ப்பதற்கும், வனப்பிராந்தியங்களின் அளவை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.



# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான எளிய இசை இயக்கம்

Mrs. Abira Ganeshanathan

01) $V^2=k^2(-48c^2+16cx-x^2)$ எனும் சமன்பாட்டினால் நேர்கோட்டில் இயங்கும் துணிக்கையின் வேகம் தரப்படுகிறது. இங்கு x என்பது இயக்கக்கோட்டிலுள்ள நிலையான புள்ளியிலிருந்தான இடப்பெயர்ச்சியாகும். k,c ஒருமைகள் இயக்கம் எளிய இசை இயக்கம் எனக்காட்டி அதன் அலைவுமையம் வீச்சம் என்பவற்றைக் காண்க. $x=10c$ இலிருந்து $x=12c$ இற்கு செல்வதற்கான நேரத்தைக் காண்க.

02) ஒரு துணிக்கை P நேர்கோட்டின் வழியே இயங்குகின்றது. நேர்கோட்டின் மீதுள்ள நிலைத்த புள்ளி O இலிருந்து x m தூரத்திலிருக்கையில் அதன் வேகம் x m/s ஆகும். $x^2=a^2+2b^2x-c^2x^2$ என்பதால் தரப்படும் (a,b,c ஒருமைகள்) இத்துணிக்கையின் ஆர்முடுகலைக் காண்க. இதன் இயக்கம் எளிய இசை இயக்கம் எனக்காட்டுக.

1) அலைவுமையம் C
2) அலைவு காலம்
3) அலைவின் வீச்சம் என்பவற்றைக் காண்க.

O இல் இருந்து C இற்கு துணிக்கை செல்ல எடுத்த நேரம்

$$\frac{\tan^{-1}(b^2ac)}{c}$$ எனக் காட்டுக.

03) ஒரு நேர்கோட்டில் இயங்கும் ஓர் துணிக்கையின் வேகம் v பின்வரும் சமன்பாட்டால் தரப்படுகிறது. $v^2=-\omega^2(x^2-6ax-7a^2)$ இங்கு x என்பது நிலைத்த புள்ளி O இலிருந்து துணிக்கையின் இடப்பெயர்ச்சி ஆகும். இயக்கம் எளிய இசை இயக்கம் எனக் காட்டி

i) இயக்கமையம்
ii) அலைவுகாலம்
iii) வீச்சம்

என்பவற்றைக் காண்க. O இலிருந்து x அதிகரிக்கும் திசையில் சென்று கணநேர ஓய்விற்கு வர எடுக்கும் நேரம் t ஆயின்

$$t=\frac{(\pi-\cos^{-1}3/4}{(t)}$$ எனக் காட்டுக.

04) ஒரு துணிக்கை எளிய இசை இயக்கம் நேர் கோட்டில் ஆற்றுகின்றது. ஓய்வு ஸ்தானத்திலிருந்து மற்றைய ஓய்வு ஸ்தானத்திற்கு செல்லும் பயணத்தில் அடுத்தடுத்த மூன்று செக்கன்களில் பாதையின் நடுப்புள்ளியிலிருந்து துணிக்கையின் தூரங்கள் $x_1, x_2, x_3$ எனின் துணிக்கையின் ஆவர்த்தன காலம்

$$\frac{2\pi}{\cos^{-1}\left\{\frac{x_1+x_3}{2x_2}\right\}}$$ எனக் காட்டுக

05) கரிச்சுரங்கம் ஒன்றினுள் ஓர் உயர்த்தி 2h ஆழமான நிலைக்குத்தான ஒரு தண்டு AB வழியே கீழ் நோக்கி இயங்குகின்றது. A பூமியின் மேற்பரப்பிலும் B அரங்கத்தின் அடியிலும் உள்ளன. உயர்த்தியானது AB இன் நடுப்புள்ளி O ஐ நோக்கிய திசையில் $\omega^2x$ எனும் ஆர்முடுகலுடன் இயங்குகின்றது. இங்கு ω ஒருமை. x ஆனது O இலிருந்து உயர்த்தியின் தரையின் தூரமாகும். உயர்த்தியின் தரை A இலும் B இலும் ஓய்விற்கு வருகின்றது. உயர்த்தி A இல் இருந்து B இற்கு இயங்க எடுத்த நேரத்தை முதல் தத்துவங்களிலிருந்து காண்க. m திணிவுடைய சுரங்கமறுப்போன் ஒருவன் உயர்த்தியில் நிற்கிறான். அவனுடைய அடிகள் மீது தரையின் மறுதாக்கத்தின் அதிகூடிய அதி குறைந்த பெறுமானங்களைக் கண்டு $(1)\leq\sqrt{g/h}$ என உய்த்தறிக. $(1)>\sqrt{g/h}$ எனின் பிரயாணத்தின் ஆரம்பத்தில் $\mathrm{Con}^{-1}(gh\omega^2)$ எனும் நேரத்திற்கு மனிதன் பாதுகாப்புப்படி வளையங்களை பிடிக்கவேண்டும் என உய்த்தறிக.

06) m திணிவுள்ள துணிக்கையொன்று நேர்வரையில் அசைகின்றது. அது t நேரத்தில் அந்நேர்கோட்டிலுள்ள O எனும் நிலைத்த புள்ளியிலிருந்து z எனும் தூரத்திலுள்ளது. $z=a\cos\omega t$ இங்கு a, (1) ஒருமைகள், துணிக்கை மீது தாக்கும் விசை $m\omega^2z$ எனவும் அது O ஐ நோக்கியதெனவும் காட்டுக.

Circus அரங்கு ஒன்றில் ஒரு வித்தைக்காரன் AB எனும் கயிற்றின் நடுப்புள்ளி P இல் நிற்கிறான். P இற்கு அருகிலுள்ள பகுதி கிடையாகவும் நிலைக்குத்துத் திசையில் சமநிலை ஸ்தானத்திலிருந்து வீச்சம் a உம் அலைவுகாலம் $2\pi/\omega$ ஆகவும் இருக்கும் எளிய இறை இயக்கத்தில் இயங்கும்படி கயிறு அசைக்கப்படுகின்றது. P சமநிலை ஸ்தானத்திற்கு மேலே z உயரத்தில் இருக்கையில் வித்தைக்காரனுக்கும் கயிற்றுக்குமிடையிலுள்ள R எனும் மறுதாக்க விசையைக் காண்க?

$\omega>\sqrt{g/a}$ எனின் வித்தைக்காரன் கயிற்றிலிருந்து தூக்கி வீசப்படுவான் எனக் காட்டுக.

1) கயிறு சமநிலை ஸ்தானத்தில் இருந்து கீழ்நோக்கி அசைக்கப்பட்டால் எவ்வளவு நேரத்தின் பின் அவன் தூக்கி எறியப்படலாம்?

07) O,A,B,C ஆகிய நான்கு நிலைத்த புள்ளிகள் ஒரு நேர்கோட்டில் இருக்கின்றன. OA = OB = BC = a துண்டம் OA இல் P இருக்கும்போது $x=-\omega^2x$ துண்டம் AB இல் P இருக்கும்போது $x=-\omega 2a$ என ஆர்முடுகலானது அமையும் வண்ணம் P எனும் துணிக்கை நேர்கோட்டில் நகர்கின்றது. இங்கு x = OP. ω ஓர் ஒருமை ஆகும். இத் துணிக்கை 3a ω வேகத்துடன் OABC இன் திசையாக O இலிருந்து எறியப்படுகிறது. C இல் வேகம் பூச்சியம் எனக்காட்டுக. துணிக்கை O ஐ திரும்ப அடைய எடுத்த நேரம் என்ன?

08) d இடைத்தூரத்திலுள்ள புள்ளிகள் A,B இனூடு இரு நேர்கோடுகள் a, b முறையே ω, 3ω உடன் ஒரு தளத்தில் ஒரே போக்கில் சுழலுகின்றன. யாது மோர் கணத்தில் a,b இன் இடைவெட்டுப்புள்ளி P ஆகவும் p இலிருந்து AB இற்கு வரையப்பட்ட செவ்வனின் அடி N ஆகவும் இருப்பின் $x=d\cos^2$ எனக் காட்டுக.

இங்கு $P\hat{A}B=\theta$. AB இன் நடுப்புள்ளியிலிருந்து N இன் தூரம் x ஆகும். இதிலிருந்து N இனது வீச்சம் d உம் அலைவுகாலம் $\pi/\omega$ ஆகவுமுள்ள எளிய இசை இயக்கத்தை ஆற்றும் என நிறுவுக. ஆரம்பத்தில் இரு நேர்கோடுகளும் ஒரு கிடைக்கோட்டில் அமைகின்றன.

09) ஒரு நேர்த்தெருவில் சீரான வேகம் u உடன் ஒரு taxi செல்லுகிறது. இந்த taxi தெருவில் t எனும் புள்ளியில் செல்லும் கணத்தில் அதற்கு முன்பாக d தூரத்திலுள்ள P எனும் புள்ளியி லுள்ள பிரயாணி அதை அழைக்கின்றான் PT இன் நீட்சியில்

OT : OP = m : n (m, n>o, m<n) ஆகுமாறுள்ள புள்ளி O ஆகும். taxi இன் அமர்முடுகல் $\omega^2x$ ஆகுமாறு சாரதி தடுப்புக்களை பிரயோகிக்கிறான். இங்கு x, O இலிருந்து taxi இன் தூரம். ω ஒருமை. taxi P இல் ஓய்வடைகின்றது. ω இன் பெறுமானத்திற்கு ஒரு கோவையைப் பெற்று taxi t யில் இருந்து P இற்குச் செல்ல எடுத்த நேரம் t ஆயின்.

$$t=\frac{d}{u}\sqrt{\frac{n+m}{n-m}}\cos^{-1}(m/n)$$ எனக் காட்டுக.

10) ஓர் அழுத்தமான கிடையான நேர்த்தவாளிப்பினுள் m திணிவுடைய துணிக்கை P சுயாதீனமாக இயங்கவல்லது. O தவாளிப்பினுள் நிலைத்தபுள்ளி OP = x, ω ஓர் ஒருமை ஆகும். துணிக்கை மீது O ஐ நோக்கி $m\omega^2x$ எனும் விசை தாக்குகின்றது. O இலிருந்து a தூரத்தில் இத்துணிக்கை சுயாதீனமாக விடப்படுகிறது. O இலிருந்து na(o<n<1) தூரத்தினுள் தவாளிப்பினுள் ஓய்விலிருந்து m1 திணிவுடைய வேறோர் துணிக்கையுடன் இத்துணிக்கை மோதிக் கூட்டுச் சேர்கின்றது. கூட்டு உடலில் தாக்கும் விசை $(m+m1)\omega^2x$ எனின் இயக்கத்திற்கான வீச்சம்

$$\frac{a}{k+1}\sqrt{k^2+2kn^2+n^2}$$ எனக் காட்டுக. இங்கு $m/m^1=k$

11) m திணிவுடைய துணிக்கையொன்று ஒரு ஒப்பமான கிடைமேசை மீது O எனும் நிலையான புள்ளிலிருந்து aω கதியுடன் இயங்கத் தொடங்குகின்றது. அது O வை நோக்கி $m\omega^2x$ எனும் விசைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இங்கு x என்பது O இலிருந்து துணிக்கையின் தூரமாகும். b தூரத்தைக் கடந்ததும் ஓய்விலுள்ள இன்னோர் m திணிவுடைய துணிக்கையுடன் இணைந்து விடுகின்றது. விசையின் பருமன் மாறவில்லையெனக் கொண்டு இணைந்த துணிக்கை முதலில் ஓய்வடையமுன் சென்ற தூரத்தைக் கணித்து ஆரம்ப நிலையிலிருந்து ஓய்விற்கு வர எடுத்தநேரம்.

$$\frac{1}{\omega}\left\{\sin^{-1}(b/a)+\sqrt{2}\cos^{-1}\left(\frac{b\sqrt{2}}{\sqrt{a^2+b^2}}\right)\right\}$$

12) ஒவ்வொன்றும் m திணியுடைய 2h நீளமுள்ள இரு சமச்சீரான நேர்வட்ட உருளைகள் அவற்றின் அச்சுக்கள் ஒரே கோட்டிலிருக்கும் அழுத்தமான கிடை மேசை மீது இருக்குமாறு வைக்கப்பட்டுள்ளன. உருளைகளின் அச்சுக்கள் வழியே அழுத்தமான துவாரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அச்சுக்களின் நடுப்புள்ளிகளிலே இயற்கை நிளம் $l\,(>2h)$ உடைய மெல்லிய நேரான விற்சுருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறமைக்கப்பட்ட தாங்கியின் ஒவ்வொரு உருளையின் h தூரத்தினுள்ளும் சுருளின் ா நீளம் இருக்கின்றது. விற்சுருள் h தூரத்திற்கு சுருங்க / விரிக்க வேண்டிய விசை mgh/l ஆகும். இரு உருளைகளும் சமநிலையிலிருந்து ஒன்றையொன்று நோக்கி ஒரே கதி u உடன் தள்ளப்படுகின்றன. $u<(1\sqrt{2h})g/2l$ எனின் உருளைகள் ஒன்றுடன் ஒன்று மோதாது எனக் காட்டுக.


$u>(1\sqrt{2h})$ ஆகவும் உருளைகள் நிறை மீள்தன்மையடையனவாக இருப்பின் தாங்கியின் அதிர்வுகாலம்.

$$\sqrt{\frac{2l}{g}}\left\{\pi\cos^{-1}\left(\frac{l-2h}{2u}\right)\sqrt{\frac{2g}{l}}\right\}$$ எனக்காட்டுக.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

English

From Forest to paper



**1) The Pictures show the process of making paper, Match the pictures with the process. Write the correct Number in the cage, One i done for you.**

a) Wood chips are usually cooked in a chemical solution inside a closed tank. The chemical mixture changes the wood chips into pulp. [ ]

b) Logs are debarked in a spinning drum. As the bark is removed the logs are cut into small sections. [ ]

c) A lumber company cuts trees into logs. The logs are taken to a mill. Where they will be made into paper. [ ]

d) The logs sections are cut into pieces or chips by chipping machine. [ ]

c) Water is squeezed out of the wood pulp. Then rollers dry and dress the pulp into their sheets of paper. [ ]

e) The wood pulp is washed. Unwanted material such as knots and cinders are screened out. [ ]

**02) Match the right word with their meaning on the left and write them in the boxes. Glossy /Elaborate / Controversial / Frugality / Legendry.**

a) Carefully worked out [ ]

b) Having various opinions [ ]

d) Extremely beautiful [ ]

c) Some Africans lived in a very thrift Situation [ ]

**03) The notice given is about a lost of brief case for which the details are seen**

> Lost Brown plastic brief case having three compartments and containing a text book ; exercise books notes and NIC card two pens red and blue. If found please contact S.M.James peter.
>
> 111, Bonjean Road, Colombo -13

a) Write a similar one for the wrist watch you lost in your school playground.

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

**04) Some headings of some forms are issued at the G.P.O for various uses are seen underneath. Read them and write down the correct number for the purpose stated.**

1. DEPARTMENT OF TELECOMMUNICATION T D / 1
   This form is for inland and indian telegram only

2. APPLICATION FOR INLAND TELEGRAPH MONEY ORDER P.O.C 0/3

3. APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER P.O.C /1

4. SRI LANKA TELEGRAPHS
   FOREIGN TELEGRAM
   PREFIX ....................... CODE..................................

5. APPLICATION FOR A LICENCE TO POSSESS AND OPERATE WIRELESS APPARATUS FOR THE PURPOSE OF BROADCAST IN AND FOR A TELEVISION STLISTENING.

6. APPLICATION FOR TRANSFER OF BROADCAST RECEIVING SET LICENCE

1. Mr. Shegar wants to send money urgently to his son at Peredeniya campus. Which form will he have to use?

2. Mohan bought a colour T.V. set which form will the post - master give him?

3. You want to send a telegram to Colombo. Write down the number of the form the post - master will give you?

4. You want to send a telegram to your brother in Paris. Which form will the Post master give you? Write down the number.

5. You have sold your Radio set to a friend which form will you use to transfer the licence?

**05) You want to go to the library with a friend of yours, In the absence of none at home. write a note to your mother for leaving. Include the following.**

:- The time of your departure. ..................................

:- With whom you are going. ..................................

:- Where and the time you would return home. ..................................

**06) a) Write in the oval shapes the word their refers, pertaining to science and technology**

1) A ship specially military one that can stay under water ( )

2) A system that allows people to send messages to each other thrugh compute. ( )

3) A scientific instrument that makes small things look bigger ( )

b) Who are these people connected with these things

1) Sewing ..............................................................................

2) Crimes ..............................................................................

3) Plants ..............................................................................

## PART - II

**07) Read the following poem and answer the questions given below.**

The Town Child

I live in the town in a street
It is crowded with traffic and feet.
There are buses and motors and trams
I wish there were meadows and lambs.
The houses all wait in a row
There is smoke everywhere
That I go
I don't like the noises I hear

I) wish there were woods in the poem, which rhyme.

a) Lambs b) row

II) What are vehicles mentioned in the first verse ..................................

III) Where does the child like to live? ..................................

# வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு சமூக சேவைகளில் ஈடுபடவேண்டும்

## பேராசிரியர் க.தேவராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மனித வாழ்க்கையில் நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு சமூக சேவைகளில் ஈடுபட வேண்டும் இவ்வாறு சமூக சேவைகளில் சிறப்பாகச் செயற்படுபவர்களுக்கு கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் சமூகதிலகம் பட்டம் வழங்கிக் கௌரவித்து வருவது பாராட்டுக்குரியது என யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறை தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தெரிவித்தார்.

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய புத்தாண்டு விழா அண்மையில் கொட்டடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்



வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கொட்டடி கிராம முன்னேற்றச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து இப்பிரதேசத்திற்கு பல்வேறு அபிவிருத்திச் சேவைகளைச் செய்து வருகிறது. வாசிப்பால் மனிதன் பூரணமடைகிறான் என்ற மகுடவாசகத்திற்கிணங்க இச் சனசமூக நிலையம் பத்திரிகைகள் சஞ்சிகைகளை இப்பகுதி மக்கள் வாசிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளது.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் இந்தப் பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர்களுக்கும் மற்றும் பொது அறிவுப்போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்களை மேசை நிறைய அடுக்கி வைத்து வழங்குவது மேலும் இப்பிரதேசத்து பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிப்பதோடு எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்கள் இப்பிரதேசத்திலிருந்து தோன்ற வழிவகுக்கும்.

பல்வேறு துறைகளிலும் சமூகத்திற்குச் சேவையாற்றிவரும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பன்னிருவருக்கு "சமூக திலகம்" கௌரவப்பட்டம் வழங்கியமை அவர்களை சமூகசேவையில் மேலும் உற்சாகப்படுத்துவதோடு ஏனைய மக்களையும் சமூக சேவை செய்யத்தூண்டுகிறது என்றார். (10)

# சிற்றூழியர்களின் பொறுப்பற்ற தன்மை விசனமடையும் நோயாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் பல்வேறு பிரிவில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் நோயாளிகளுடன் சீரான அணுகுமுறையினை பேணுவதில்லை என நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல்வலியுடன் செல்லும நோயாளர்கள் கதைக்க முடியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் கூறும் பெயர்களை சரியாக உற்று கேட்காமல் மீண்டும் மீண்டும் ஒரு விடயத்தினை கூறுமாறு வற்புறுத்தப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்

வேலை நேரத்தில் கையடக்கத் தொலைபேசியில் பாடலை ஒலிக்க விட்டு,தமது வேலைகளை செய்வதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.அவ்வாறு பாடல் கேட்கும் போது பாடலின் சத்தத்தில் நோயாளிகள் கூறுவதை அந்த சிற்றூழியர்கள் அவதானிப்பதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். இதனால் பல்வேறு அசௌகரியங்களை தாம் எதிர்நோக்குவதுடன், பல்வைத்தியரிடம் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் தனியார் வைத்திய சாலைகளை நாடவேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுவதாகவும் நோயாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தூர இடங்களில் இருந்து வருகை தரும் போது குறித்த சிற்றூழியர்கள் அசண்டையீனமாக நடப்பதுடன், பல்வலியினால் முதன்முதலாக சிகிச்சைக்கு வரும் போது, கிளினிக்கொப்பி வாங்கி வருமாறும் அதட்டிக்கூறுவதாக நோயாளிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு, நோயாளிகளுடன் அசண்டையீனமாகவும் பொறுப்பற்ற விதத்திலும் நடக்கும் சிற்றூழியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ். போதனா வைத்தியசாலை பணிபபாளரிடம் நோயாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (25)

# மூவருக்கு டெங்கு

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் மூவர் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலை அதிகாரி பிரிவில் புலோலியில் இருந்து ஒருவரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தாவடியில் இருந்து ஒருவரும் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இருந்து ஒருவருமாக மூவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# கருத்தமர்வு

யாழ்.முகாமைத்துவ சம்மேளனத்தின் 133 ஆவது கருத்தவர்வாக உலக பொருளாதாரத்தின் போக்கும் இலங்கையில் அதன் தாக்கமும் என்னும் விடயம் பற்றிய கருத்தமர்வு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் வளவாளராக பேராசிரியர் ரசின்சாலி கலந்துகொள்ளவுள்ளார். இக்கருத்தமர்வு இல 17 அக்றேறியன் சேவை ஒழுங்கை நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (25)

# 48 பயணிகளுடன் ஆற்றுக்குள் பாய்ந்தது பஸ்



(மட்டக்களப்பு)

கல்முனை நகரிலிருந்து 48 பயணிகளுடன் சவளக்கடை ஊடாக 11ஆம் கொலனி நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிட்டங்கி ஆற்றுக்குள் பாய்ந்துள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் பயணிகள் அனைவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

கல்முனை நகரிலிருந்து நாவிதன்வெளிப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் நலன்கருதி இந்த பஸ் சேவை இடம்பெறுகின்றது.

ஆசிரியர்களுடனும் பொது மக்களுடனும் கிட்டங்கி வீதியால் வந்து கொண்டிருந்தபோது, பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்துள்ளது. சாரதியின் சாமர்த்தியத்தால் பஸ் குடை சாயாது, பாரிய விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டது.

# கரவெட்டி பிரதேச சபைக்கூட்டத்தில் அபிவிருத்தி குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை சபை மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றதுடன் இக்கூட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

சபை தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் ஆரம்பமான இக்கூட்டத்தில் தவிசாளர் தன்னைப் பற்றி இணையத்தளங்களில் அவதூறாகச் செய்திகள் வெளியிடுவது கண்டிக்கத்தக்க விடயமாகும். நான் நேர்மையாக நடந்து வருகிறேன் என்னை யாரும் குறைகூறமுடியாது என சபையில் தெரிவித்தார்.

இவரின் கருத்துக்கு சபை உறுப்பினர்கள் மௌனம் சாதித்ததுடன் சபை உறுப்பினரான ஆ.மதியரசன், தவிசாளர் சபைக்கு வந்து 3 வருடங்கள் முடிந்தும் எந்தவிதமான அபிவிருத்தியும் மேற்கொள்ளப் படவில்லை என கூறினார்.

மேலும் சபை உறுப்பினரான பொ.குகதாஸ் தவிசாளர் சபையின் கீழ் வேலை செய்யும் ஊழியர்கள் உத்தியோகத்தர்களை மதிப்பதில்லை என சபை செயலாளரிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து சபையில் புதிய செயலாளர் கன்னி உரையாற்றினார் இதில் நான் பிரதேச சபையின் உறுப்பினர்களுடன் ஒன்று சேர்ந்து அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பேன் என்றார் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர்கள் தங்களை அறிமுகம் செய்து வைத்தனர்.

இதேவேளை அபிவிருத்தி குறித்து கலந்துரையாடப்பட்ட போது சபை எதிர்க்கட்சி உறுப்பினர் மு.கணபதிப்பிள்ளை, மழை காலத்திற்கு முன்னர் நெல்லியடி பஸ் நிலையம் விரைவாக கட்டிமுடிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தார் இவ்விடயத்தை சபை உறுப் பினரகளும் ஏற்றுக் கொண்டனர்.(18)

# வைகாசி விசாகம்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் வைகாசி விசாகத் திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு அபிஷேகங்களுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மு.ப 11 மணியளவில் சண்முக அர்ச்சனை நடைபெற்று தொடர்ந்து முருகப் பெருமான் வீதி வலம் வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது.

# இந்துதர்மாசிரியர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு 2013 (2014) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளின் பெயர் பூரணப்படுத்தப்பட்ட ஏனைய விடயங்கள் திருத்தமானவையா என உறுதிசெய்து கொண்ட பின் விண்ணப்பதாரிகள் கையொப்பமிட வேண்டும்.

விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறநெறிப் பாடசாலையின் கணனி இலக்கம் சரியானதென்பதை உறுதி செய்ய வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு மூலப்பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை பத்திரமுல்லை என்னும் முகவரிக்கு எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் எனவும் காலம் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலக நேரிடும்

## எச்சரிக்கிறார் பிரதமர் கமரூன்



(லண்டன்)

ஐரோப்பிய யூனியனின் செயல் அமைப்பான, ஐரோப்பிய குழுத் தலைவராக, லக்சம்பர்க் நாட்டின் முன்னாள் பிரதமர் ஜீன் கிளாடி ஜங்கர் நியமிக்கப்பட்டால், ஐரோப்பிய யூனியன் அமைப் பிலிருந்து பிரிட்டன் விலக நேரிடும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி போன்ற 28 நாடுகள் இணைந்து, ஐரோப்பிய யூனியன் என்ற பொதுவான அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த அமைப்பின் நாடாளுமன்றம் பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்ஸ் நகரில் உள்ளது.

நாடாளுமன்றில் கடந்த வாரம் நடைபெற்ற தேர்தலில், ஜேர்மனி பெண் அதிபர், ஏஞ்சலா மெர்கல் தலைமையிலான, "கிறிஸ்டியன் டெமாகிராட்ஸ்" அணியினர் அமோக வெற்றி பெற்றனர். மொத்தமுள்ள, 751 இடங்களில், 213 இடங்களை அந்த அணியினர் பிடித்தனர்.

இதனால், ஐரோப்பிய யூனியனில் ஜேர்மனியின் ஆதிக்கம் தொடர்ந்துள்ளது. இதனால், பிரிட்டன் அதிருப்தி அடைந்துள்ளது. ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத்தின் செயல் அமைப்பான, ஐரோப்பிய கமிஷன் தலைவராக, லக்சம்பர்க் நாட்டின் முன்னாள் பிரதமர் ஜீன் கிளாடி ஜங்கர் பெயரை, ஜெர்மனி பெண் அதிபர் ஏஞ்சலா, இரண்டு நாட்களுக்கு முன் அறிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஐரோப்பிய குழு தலைவராக ஜங்கர், நியமிக்கப்பட்டால், ஐரோப்பிய யூனியன் அமைப்பிலிருந்து, பிரிட்டன் விலக நேரிடும் என்றார்.

அது போல், ஸ்வீடன் மற்றும் ஹங்கேரி நாடுகளின் தலைவர்களும், ஜங்கருக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய யூனியன் அமைப்பு, 1952 இல் ஏற்படுத்தப்பட்டது. எனினும், பலமுறை வீழ்ச்சி அடைந்து சிதறியுள்ள இந்த அமைப்பு, 2009 டிசம்பரில், மீண்டும் உத்வேகம் பெற்றது. உறுப்பு நாடுகளுக்கு இடையே, "யூரோ" கரன்சி புழங்குகிறது. ஐரோப்பிய குழு ஐரோப்பிய குழு ஐரோப்பிய நாடாளுமன்றம் என மூன்று அமைப்புகளை கொண்டுள்ளது, ஐரோப்பிய யூனியன் அமைப்பு. நாடாளுமன்றம் இரு சபைகளைக் கொண்டது.

# இந்திய மத்திய அமைச்சர் கார் விபத்தில் பலி




(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டே சாலை விபத்தில் மரணமடைந்தார். விமான நிலையத்திற்குச் செல்லும் வழியில் கார் விபத்தில் சிக்கி காயமடைந்த அவர் எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

காயத்திற்கு மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கும் போது மாரடைப்பால் முண்டே உயிரிழந்தார். நேற்றுக் காலை 8 மணிக்கு முண்டே மரணமடைந்ததாக பாஜக தலைவர் நிதின் கட்கரி தகவல் அளித்துள்ளார்.


# புகுஷிமா அணு உலைக்கு அடியில் பனிச்சுவரை அமைக்கிறது ஜப்பான்

(டோக்கியோ)

சுனாமியில் சிக்கிய புகுஷிமா அணு உலைக்கு அடியில் பனிச்சுவரை ஜப்பான் அரசு எழுப்புகிறது.

ஜப்பானில் உள்ள புகுஷிமா அணு உலை சுனாமி பேரழிவில் சிக்கியபோது வெடித்துச் சிதறியது. அப்போது அணு உலையில் இருந்து வெளியேறிய கதிர்வீச்சால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து, தற்போது அந்த அணு உலை முற்றிலும் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், முடங்கியுள்ள அந்த அணு உலைக்கு கீழே உள்ள நிலத்தடி நீர் அதிகமான கதிர்வீச்சு பாய்ந்து நச்சுத் தன்மை மிகுந்து காணப்படுகிறது. அது அணு உலையிலுள்ள மலைப் பகுதிகளின் கீழ் காணப்படும் நிலத்தடி நீரோடு கலந்து விடாமல்



தடுப்பதற்காக பனிச்சுவரை எழுப்பும் பணியில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது.

அந்நாட்டின் அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் கடந்த மாதம் இந்த பனிச்சுவரை எழுப்ப அனுமதி அளித்தது. அரசின் நிதியுதவியுடன் எழுப்பப்படும் இந்த பனிச்சுவரில் மண் நிரப்பப்பட்ட பைப்புகளை உட்செலுத்தி 1.5 கிலோ மீற்றர் ஆழத்தில் பிரத்தியேக இயந்திரம் மூலம் அங்குள்ள நச்சுத்தன்மை வாய்நத நிலத்தடி நீர் பனிக்கட்டிகளாக குளிர்விக்கப்படுகிறது.

# இந்தியாவில் 60 இலட்சம் பேர் மனநோயால் பாதிப்பு


சர்வதேச அளவிலான மனநல மருத்துவர்களின் 2 நாள் மாநாடு டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில், இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து 300 இற்கும் மேற்பட்ட மனநல மருத்துவர்கள் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

மாநாடு குறித்து பிரபல மனநல மருத்துவர் மிட்டல் நிருபர்களிடம் கூறுகையில், இந்திய மக்கள் தொகையில், 60 இலட்சம் பேர் மனநலம் பாதிக்கப்பட்டோர் ஆவர். எனினும் இவர்களுக்கு சிகிச்சை அளிக்க நாடு முழுவதும் 4 ஆயிரம் மனநல நிபுணர்கள் தான் இருக்கிறார்கள்.

இதுபோதுமானது அல்ல. கிராமப்புறங்களில், மனநல பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்க தற்போது உள்நாட்டு நுணுக்கங்களுடன் கூடிய சிகிச்சை முறை அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. குறிப்பாக மன உளைச்சலுக்கு உள்ளாகும் இளைஞர்களை "மீண்டும் மீண்டும் மண்டையோட்டில் காந்த தூண்டுதல்" என்னும் அதிநவீன முறையின் மூலம் குணப்படுத்துவதில் நல்ல பயன் கிடைத்து இருக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்


# தமிழக காங்கிரஸ் தலைவர் இந்திய பிரதமருக்கு பாராட்டு



காங்கிரஸ் ஆட்சியில், தலைவர்கள் பெயரில் தொடங்கப்பட்ட, நலத் திட்டங்களின் பெயரை மாற்ற மாட்டோம் என, பிரதமர் நரேந்திர மோடி கூறியதற்கு; தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் கூறியதாவது, லோக் சபா தேர்தலில், காங்கிரஸ் கட்சியால் மோடியின் பிரசாரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் போய் விட்டது. கடந்த காலத்தில், தமிழக மீனவர்கள் கடத்தல் தொடர்பாக, பா.ஜ. கட்சியினர், காங்கிரசை குற்றம் சாட்டினர். தற்போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடத்தப்பட்டது பற்றி, கமலாலயத்துக்கு சென்று, பா.ஜ., தலைவர், பொன். ராதாகிருஷ்ணனிடம் தான் கேட்கவேண்டும். "மத்திய அரசின் வளர்ச்சி திட்டங்களுக்கு, ஏற்கனவே சூட்டப்பட்டுள்ள தலைவர் பெயர்களை நீக்கமாட்டோம் என, பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார். அதை, காங்கிரஸ் கட்சி சார்பில் வரவேற்கிறோம் இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடகாவில் வாகன விபத்து 15 பேர் ஸ்தலத்தில் பலியாகினர்



(இந்தியா)

இந்திய, கர்நாடக மாநிலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

அரசுக்குச் சொந்தமான பஸ் மற்றும் தனியார் வான் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு வாகனங்களும் மிக வேகமாக மோதியதில், வான் பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

வானின் சாரதி உள்ளிட்ட 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லும் வழியில் பலியாகினர். விபத்தில் பலியான 15 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர், இதில் 3 குழந்தைகளும் 5 பெண்களும் அடங்குவர்.

காயமடைந்த நிலையில் பஸ்ஸின் சாரதி, நடத்துநர் உள்ளிட்ட 8 பேரும் வானிலிருந்த 6 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# போகோஹரம் தீவிரவாதிகள் 9 பேர் சுட்டுக்கொலை

நைஜீரியாவில் பொதுமக்களை கொன்று குவிக்கும் போகோஹரம் தீவிரவாதிகளை ஒழிக்க இராணுவத்துக்கு அதிபர் குட்லக் ஜோனாதன் உத்தரவிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து போர்னோ மாகாணத்தில் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

பியூநகரில் ஒரு பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் மீது இராணுவம் துப்பாக்கியால் சுட்டது. அதை தொடர்ந்து தீவிரவாதிகள் பதிலுக்கு சுட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது.

அதில் 4 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒருவன் உயிருடன் பிடிப்பட்டான். அதே போன்று புருடாய், கவூரி ஆகிய இடங்களிலும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மேலும், அவர்களிடமிருந்து 2 ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் மற்றும் 2 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முபி என்ற இடத்தில் தீவிரவாதிகளின் வெடிகுண்டு தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர். அதை தொடர்ந்து அச்சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய தீவிரவாதிகள் கைது செய்யப்படடனர்.

# இளைஞர் சமூக சேவை கழகத்துக்கு அமைச்சர் டக்ளஸ் நிதி உதவி



முல்லைத்தீவு கரைச்சி குடியிருப்பு கிக்ஸ் இளைஞர் சமூக சேவை கழகத்தின் மேம்பாட்டுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளார்.

கரைச்சி குடியிருப்பில் மேற்படி கழகப் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடிய போது அவர் இந்நிதியுதவியினை வழங்கியுள்ளார். கிக்ஸ் சமூக சேவைக் கழகமானது சமூக சேவைகளுடன் மாத்திரமல்லாது கல்வி மற்றும் விளையாட்டு செயற்பாடுகளை இலவசமாக முன்னெடுத்து சமூக சேவையாற்றி வருகின்றது.

இந்நிலையில், கழக அங்கத்தவர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் முன்னெடுக்கப்படவுள்ளதான வேலைத் திட்டமொன்றுக்கான திட்ட அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்ட அதேவேளை, கழகத்தினரும், அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ், கைத்தொழில அபிவிருத்தி சபையினரும் இணைந்து அங்கு சுய தொழில் வாய்ப்புக்களை முன்னெடுக்கும் வகையில் ஆராய்ந்து பிரதேச செயலர் ஊடாக திட்ட அறிக்கையினை தமக்கு சமர்ப்பிக்குமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது கிக்ஸ் சமூக சேவை கழக மேம்பாட்டுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக அதன் தலைவர் அன்ரனி ஜோசப அவர்களிடம் இந்த நிதியை வழங்கி வைத்தார். இதன்போது அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் உடனிருந்தனர்.

அதேவேளை, பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுயதொழிற்துறையை விருத்தி செய்வது குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

முதலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார். இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் அங்கு தும்புத் தொழிற்சாலையொன்றை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடாக அமைத்து அதனூடாக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுப்பது, முதியோர்களுக்கென பிறிதொரு வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுப்பது, கைப்பணி மற்றும் கைவினை உற்பத்திகள் ஊடான சுயதொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் வகையில் பிரதேச செயலருடன் கலந்துரையாடி கைத்தொழில் அபிவிருத்தி சபையும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டவர்களை கொண்டு இயங்கும் சங்கத்தினையும் ஒன்றிணைந்து கூட்டுத் தொழிற் முயற்சியில் ஈடுபடுவதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தார்.

# வாக்காளர் பதிவின் அவசியம் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

## உதவித்தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வாக்குரிமை மற்றும் வாக்காளர் பதிவு குறித்து பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு பாடசாலை அதிபர்களிடம் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொன்னுத்துரை குகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்குரிமை மற்றும் வாக்காளர் பதிவு தொடர்பிலான நன்மைகள வாக்காளர்களுக்கு தெளிவின்மை காணப்படுவதனால், பாடசாலை மாணவர்கள் மத்தியில் இவ் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் வாக்காளர் பதிவு மற்றும் வாக்குரிமை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான அனுமதியினை யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயக்கல்வி பணிப்பாளர்களிடமும் கடிதம் மூலம் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் கோரியுள்ளது.

இந்நிலையில் இன்று முதல் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் வாக்குரிமை தொடர்பிலான துண்டுப் பிரசுரத்தினை அனுப்பி வைக்கவுள்ளனர்.

தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவுள்ள இத் துண்டுப்பிரசுரத்தில் வாக்குரிமை குறித்து எழுதப்பட்டுள்ள விடயங்களை வகுப்பாசிரியர் ஊடாக மாணவர்களுக்கு அறிவுறுத்துவதற்கான செயற்பாட்டினை முன்னெடுக்குமாறு யாழ். மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதனடிப்படையில், யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களுக்கும் வாக்குரிமை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த அனுமதி கோரி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு, வடமராட்சி வலய கல்வி பணிப்பாளரிடமிருந்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்து பதில் கடிதம் தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வலயங்களில் இருந்து எதுவித பதில்களும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், அரச அதிகாரி என்ற வகையில், அரச கருமங்களை மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் இன்று முதல் வாக்குரிமை தொடர்பிலான விடயங்களை மாணவர்களுக்கு அறிவுறுத்துமாறு கோரி தேர்தல் திணைக்களத்தினால் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தினை யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் மேலும் கூறினார். (25)

# ரயில் சேவைகளில் தாமதம்

வடக்கு மற்றும் பிரதான ரயில் பாதைகளூடான ரயில் போக்குவரத்து தாமதமடைந்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

வெள்ளநிலை காரணமாக ரயில்கள் குறிப்பிட்ட ஒரு பாதையில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மீரிகம, கனேகொட, பலேவெல ஆகிய பகுதிகளில் தண்டவாளத்திற்கு மேலாக வெள்ள நீர் செல்வதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

### சர்வதேசத்தை...

நடத்தப்படும் அநியாயங்களை தடுத்துநிறுத்துவதற்காக எடுக்கப்படவில்லை என்றே கூறமுடியும். யுத்த காலப்பகுதியில் எவ்வாறு ஆயுதப் போராட்டம் இந்த அநியாயங்களை ஓரளவேனும் தடுத்துநிறுத்த முற்பட்டதோ, அந்த அளவில் தானும் சர்வதேச சமூகத்தால் நடவடிக்கை எடுக்க முடியாமல் உள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

இன்று எமது தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவ தலைமைகள் தமிழ்த் தேசிய அரசியலை ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரான மிதவாத அரசியலை நோக்கி கொண்டுசெல்கின்றனர் என நான் நினைக்கிறேன். தமிழ் மிதவாத அரசியல் தேர்தல் காலங்களில் ஒன்றையும், அதன் பின்னர் வேறொன்றையும் கூறியதனால்தான் ஆயுதப் போராட்ட அரசியல் உருவானது என அறிந்தவர்களாக நாங்கள் இருக்கின்றோம். கடந்த மாகாண சபைத் தேர்தலின்போதும் இதனைப் பார்த்திருந்தோம். தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவ அரசியலின் முன்னணி செயற்பாட்டாளர்களாக இருக்கக்கூடிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் காலங்களில் சொல்வதற்கும் நடைமுறையில் அவர்கள் செய்வதற்கும் இடையில் ஒரு இடைவெளி இருப்பதை அவதானிக்க முடிகிறது. மேலும், தலைமைத்துவம் மக்களின் விருப்புகளை பிரதிபலிக்காமல் கொழும்பை மையமாகக் கொண்டு முடிவுகளை எடுக்கின்றமையானது மீள தமிழர் அரசியலை 80இற்கு முன்னர் இருந்த அரசியல் நிலைக்கு இட்டுச்செல்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

பிரதிநிதித்துவ அரசியலுக்கு அப்பால் புதிதாக, ஆக்கபூர்வமான, வினைத்திறனான சிந்தனைகளை முன்கொண்டுவந்து தமிழ் மக்களை எவ்வாறு ஒன்றுபடுத்துவது என்பது குறித்து சிந்திக்காத அரசியல் தலைமைத்துவமே தற்போது இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உதாரணமாக பெண்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்தவர், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் இளைஞர்கள் போன்றோரை உள்வாங்கி எவ்வாறு வன்முறையற்ற, ஜனநாயக ரீதியிலான தமிழ்த் தேசிய அரசியல் இயக்கமொன்றை கட்டியெழுப்புவது என்பது தொடர்பாக எந்தவித முன்னெடுப்பும் மேற் கொள்ளாத தமிழ்த் தேசிய அரசியல் செல்நெறியை நாம் இன்று கண்டுகொண்டிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய அரசியலின் இன்றைய போக்கு - சர்வதேசத்தை நம்பியிருங்கள் என்ற கோஷம் - தமிழ் மக்களிடையே தொடர்ந்து எடுபடுமா என்ற கேள்வி எழுகின்றது. சர்வதேசத்தை நம்பி பயனில்லை என தொடர்ந்து அடக்குமுறைக்குள் வாழ தமிழ் மக்கள் இசைவாக்கம் அடைந்து விடுவார்களோ என்ற அச்சம் என்னிடத்தில் உள்ளது. தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க ஆக்கபூர்வமாக - வினைத்திறனாக நாம் செயற்பட முனையாதபோது, தொடர்ந்து அடக்குமுறைகளுக்கு உட்பட்டு வாழும் மக்கள் அதற்கு எதிராக செயற்பட முன்வராமல் இசைவாக்கம் அடைந்துவிடுவார்கள் என்றே தோன்றுகிறது. இதனைத்தான் இலங்கை அரசும் எதிர்பார்க்கின்றது.

ஆகவே, புதிதாக சிந்தித்து, முற்போக்கான முறையில், பரந்துபட்ட அரசியலாக, தீர்வுகளை தரக்கூடிய வகையிலான சிந்தனைகொண்ட தலைமை (அனைவரையும் உள்வாங்கிய இயக்கம்) இன்று தமிழ்த் தேசிய அரசியலுக்கு அவசியம். இந்தத் தலைமை சுயமாக தமிழர் அரசியலை முன்னெடுக்கக்கூடிய வகையில் அமையவேண்டும்.

இவ்வாறு குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார்.

### மக்களின்...

தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதன்பிரகாரம் சுதந்திரபுரத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் சுதந்திரபுர கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படக் கூடிய சுயதொழில் திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்தார்.

இச்சந்திப்பின் போது அரசசார்பற்ற நிறுவனமொன்று மக்களுக்கு கடனடிப்படையில் மூலப் பொருட்களை வழங்குவதாகக் கூறி தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாக அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார். அத்துடன் உடையார்கட்டுப் பகுதியிலுள்ள வெள்ளப்பள்ளம் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு அவர்கள் குடியிருக்கும் காணிகளை உரித்தாக்குவது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்தும் இந்திய வீட்டுத் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) உடனிருந்தார்.

### அது மர்ம...

போதே அதற்குரிய பற்றரி சார்ஜ் இல்லாமல் அது விடுதியின் மேல் விழுந்துள்ளது.

இந்த விமானத்தை பயன்படுத்தி விளம்பர நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான அனுமதியையும் அவர்கள் பெற்றிருக்கின்றனர். அதற்குரிய அனுமதிக் கடிதங்களை எமக்கு காட்டியதுடன் குறித்த விமானத்தின் அடையாளத்தையும் எமக்கு கூறியதை அடுத்து அந்த சிறிய ரக விமானத்தை உரியவர்களிடம் கையளித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### தெற்கிலும்...

துள்ளனர். களனி கங்கை, கிங் கங்கை, நில்வள கங்கை மற்றும் ஜின் கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக வடிகால் அமைப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

மலையகத்தில் பெய்து வரும கடும் மழை காரணமாக விமல சுரேந்திர நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

அத்தோடு லக்ஷபான நீர்தேகத்தில் 3 வான்கதவுகள் 2 அடி அளவில் திறந்துள்ளதாகவும் இதனால் இந்த இரண்டு நீர்த் தேக்கத்திலும் நீர் வெளியாகின்றமையால் களனி ஆற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கின்றது. இதன் காரணமாக மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிறி தெரிவிக்கின்றார். (மற்றுமொரு செய்தி உள்ளே)

### சண்டிலிப்பாயில்...

பட்ட போது, மோட்டார் குண்டு இருப்பதைக் கண்டு அருகில் இருந்த இராணுவ முகாமிற்கு தகவல் கொடுத்துள்ளனர்.

அந்தத் தகவலின் அடிப்படையில், குறித்த பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் நேற்று மோட்டார் குண்டினை மீட்டுள்ளனர். (25)

### இந்திய...

கொண்டிருந்த நிலையில் படகின் இயந்திரத்தில் திடீரெனக் கோளாறு ஏற்பட்டது. இதனால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த படகு மூழ்க ஆரம்பித்தது. இதனை வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் கண்டு மீனவர்களை மீட்டனர். அத்துடன் படகையும் கரை சேர்த்தனர்.

### ஓமந்தையில்...

லது யாராவது தள்ளி விழுத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது அதிகாலை குறித்த பிரதேசத்தின் பிரதேசவாசி மாடு மேய்ப்பதற்காக சென்றிருந்த வேளை அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தெரிவிக்கப் பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற புகையிரதத்தில் பயணித்த பயணியாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் நடாத்தி வருகின்றனர் (70)

# போருக்குப் பின்னரான அபிவிருத்தி; ஒருங்கிணைந்த கருத்திட்டம் வேண்டும்

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் கோரிக்கை



வடக்கில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டிய காலமிது.

இக்காலத்தினை அரசாங்க அதிகாரிகள், அலுவலர்கள் ஒருங்கிணைந்த அடிப்படையில் கருத்திட்டங்கள், முன்மொழிவுகளை முன்வைத்துச் செயற்படுத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான வி.கே.ஜெகன் இவ்வாறு தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான அபிவிருத்தியும் கருத்திட்டங்களும் எனும் தலைப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், போருக்குப் பின்னர் மக்களின் வாழ்வாதார நிலை மற்றும் உட்கட்டுமான நிலைகள், சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும், மாணவர்களின் கல்வி நிலை, குடும்பங்களின் வாழ்வாதார நிலை, ஊனமுற்ற சிறுவர்கள், விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்டவர்கள் தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டிய காலமிதுவாகும்.

எனவே வடக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சேவை புரியும் அரச அதிகாரிகள் மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களை முன்னகர்த்திச் செயற்படுத்த வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீர் விடயம் அரசியல்மயப்பட்டுவிட்டது.

இரணைமடுப் பிரச்சினை வன்னி-யாழ். பிரச்சினையாகிவிட்டது. எனவே உண்மையான, மெய்யான அபிவிருத்தி இலக்கின் ஊடாகச் சிறந்த அபிவிருத்தியைப் பெறலாம்.

உணர்ச்சிவசப்பட்ட, உசுப்பேற்றும் பேச்சுக்களால் மக்கள் பணியாற்றிட முடியாது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (92)

# ஊரத்தி மக்களுக்கு காணி உரிமம் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி

அராலி ஊரத்தி மக்கள் ஒன்றிணைந்து தமக்குரிய காணியைப் பெறும் நோக்குடன் ஒற்றுமை உணர்வுடன் ஒருங்கிணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

வலி.மேற்கில் பிரதேசசபைக் காணியில் சங்கானையிலும், அராலி ஊரத்தியிலுமாக இரு பிரதேசங்களில் மக்கள் குடியமர்ந்து வசித்து வருகின்றனர்.

ஆனால் வலி.மேற்கு சங்கானையிலுள்ள மக்களுக்கு விரைவில் காணி பகிர்ந்து வழங்க மேற்படி சபை நிர்வாகம் நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளது.

இதேநேரம் அராலி ஊரத்தி மக்கள் தங்களிடையே ஒற்றுமை உணர்வு காணப்படாததால் இத்திட்டம் நீண்டகாலம் உருப்பெறவில்லை.

பிரதேச சபையின் காணி வழங்கும் வேலைத்திட்டத்திற்கு ஒற்றுமை உணர்வுடன் பங்களித்துக் காணியைப் பெறுவதற்கு வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரின் உதவியை நாடியுள்ளதாக செந்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (92)

# உலக சுற்றாடல் தினம்; யாழ்.நகரில் சைக்கிள் பேரணி

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தினை ஒட்டி விழிப்புணர்வு சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் பேரணி ஒன்றினை நடாத்த யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.சிவில் பொதுமக்கள் தொடர்புக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தனர்.

யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகம், யாழ். மாவட்ட பொலிஸார், சுற்றாடல் அதிகார சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவம் கச்சேரி இணைந்து, உலக சுற்றாடல் தினத்தினை அனுஷ்டிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 7ஆம் திகதி சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பிலான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு 75 பேர் கொண்ட பொதுமக்களின் சைக்கிள் பேர ணியும், 30 மோட்டார் சைக்கிள் கொண்ட இராணுவத்தினரின் பேரணியும் இடம்பெறவுள்ளது.



பொதுமக்களின் சைக்கிள் பேரணி மாவிட்டபுரம் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி துரையப்பா விளையாட்டரங்கு வரையும், இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் பேரணி பலாலியில் இருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரையிலும் இடம்பெறவுள்ளது. இச்சுற்றாடல் விழிப்புணர்வு பேரணியில் மக்களின் ஆதரவினை எதிர்பார்ப்பதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர். (25)

# தொண்டர் படையினருக்கு நாளை நியமனக் கடிதம்

இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பாதுகாப்பு படைத தலைமையகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் பொது மக்கள் தொடர்புக் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் பின்னர் சிவில் பொதுமக்கள் தொடர்புக் காரியாலய அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் நாளை காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வில், சிவில் பாதுகாப்பு படைகளின் அத்தியட்சகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை, அன்றைய தினம் மாலை 6.30 மணியளவில் தமிழ்மொழி கற்றுக்கொண்ட இராணுவத்தினருக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகவும், காங்கேசன்துறை பனைமரநிழல் தல்செவன ஹோட்டலில் நடைபெறவுள்ளதாகவும், சிவில் பொது மக்கள் தொடர்புக் காரியாலய அதிகாரி மேலும் கூறினார்.

# கடன் அட்டை மோசடி; நான்கு பேர் சிக்கினர்

பாரியளவில் கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட நான்கு பேரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 437 போலி கடன் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.சந்தேக நபர்கள் நாட்டின் பல பகுதிகளில் உள்ள ஏ.ரீ.எம்.களின் ஊடாக பணம் மீளப்பெற்றுக் கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தெஹிவளையில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நெல்லியடி, வெள்ளவத்தை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். கடன் அட்டை மோசடிக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் 40,000 ரூபா பணம் ஆகியனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# மோடியுடன் ஜெயா சந்திப்பு



(புதுடில்லி)

முல்லைப் பெரியாறு வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்த, மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தினார்.

டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை, அவரது அலுவலகத்தில் நேற்று பிற்பகலில் முதல்வர் ஜெயலலிதா சந்தித்துப் பேசினார்.

நீடித்த இந்தச் சந்திப்பின் போது, நீண்ட காலமாக மத்திய அரசிடம் நிலுவையில் உள்ள தமிழகத்தின் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதித்து, மனு ஒன்றையும் பிரதமரிடம் முதல்வர் ஜெயலலிதா அளித்தார்.

பிரதமருடனான சந்திப்பைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் ஜெயலலிதா, தமிழக மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து வலியுறுத்தினேன்.

இதற்கு ஒரு வார காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக, என்னிடம் பிரதமர் உறுதி அளித்தார்.

மேலும், காவிரி மேலாண்மை ஆணையத்தை உடனடியாக அமைக்க வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் வலியுறுத்தினேன் என்றார்.

முன்னதாக, முதல்வர் ஜெயலலிதா, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை, குடியரசுத் தலைவர் மாளிகையில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# கட்டாக்காலி நாய்களால் கால்நடைகள் வேட்டை

பசிக்கொடுமையினால் கட்டாககாலி நாய்கள் இணைந்து, மேய்ந்து கொண்டிருந்த மறி ஆட்டைக் கடித்துக் குதறித் தின்றன.

இக்கொடூர சம்பவம் மானிப்பாய் கட்டுடையில் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வீட்டு உரிமையாளர் ஆட்டினை அயலில் உள்ள வளவினுள் கட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

மாலைநேரம் வந்து பார்த்த போது ஆட்டின் கால், தொடைப்பகுதி முழுவதும் உண்ணப்பட்டு ஆடு குற்றுயிராகக் கிடந்தது.

எனினும் குறித்த ஆட்டினைக காப்பாற்ற முடியாத நிலையில் ஆடு இறந்ததாக திருமதி மைக்கல் தெரிவித்தார். (92)

# மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

நிலவும் அசாதாரண கால நிலை காரணமாக 6 மாவட்டங்களில் உள்ள 20 பிரதேசங்களில் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாரிய மண்திட்டுக்கள் சரிதல் மற்றும் பாரிய கற்கள் மலைகளில் இருந்து வீழ்தல் போன்ற அபாயங்கள் காணப்படுவதாக தேசிய கட்டட ஆய்வுகள் நிறுனம் தெரிவித்துள்ளது.

களுத்துறை, காலி, இரத்தினபுரி, பதுளை, நுவரெலிய, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு இன்று காலை 9.30 மணி முதல் நாளை காலை 9.30 மணி வரையில் இந்த எச்சரிக்கை அமுலில் இருக்கும் என அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர் எம் எஸ்.பண்டார குறிப்பிட்டார். இதனிடையே, களு, கிங், நில்வலா மற்றும் களணி கங்கை ஆகிய ஆறுகளின் நீர் மட்டம் துரிதமாக அதிகரித்துள்ளதாக நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தவிர அவிசாவளை சீதவாக்க ஓய, தல்துவ, மல்வத்த, ஆராதன கந்த ஆகிய பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நிலவும் சாதாரண கால நிலை காரணமாக 5 மாவட்டங்களில் ஆயிரத்து 890 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 589 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

16 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 85 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்தி நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே பள்ளேவல மேரிகம கனேகொட தொடருந்து வெள்ளப்பெருக்கில் பாதிப்படைந்துள்ள நிலையில், தொடருந்து சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

இதனைத் தவிர மத்திய மலைநாட்டில் மஸ்கெலிய ஓயா கரைப்புறண்டுள்ளமையால் 30 வீடுகள் வரையில் நீரில் மூழ்கியுள்ளன.

அத்துடன் சாமிமலையில் 20 வீடுகளும் மஹாநெளவ பகுதியில் 10 வீடுகளும் பதிக்கப்பட்டுள்ளன. அங்கு வசித்த 70 பேர் தற்காலிக இடங்கிளில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.